பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 29 வியாழக்கிழமை (12.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :167

### இலங்கை அரசின் பொறுப்பற்ற போக்கால்

# அமைதி வழித் தீர்வு அசாத்தியமாகிறது!

## தமிழ்ச்செல்வன் அறிவிப்பு



கொழும்பு,மே 12

**பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகளை நிராகரித்து, உதாசீனம் செய்து புலிகள் மீது ஒரு நிழல் யுத்தத்தைத் தொடுத்து நிலைமையை மோசமாக்கும் இலங்கை அரசின் பொறுப்பற்ற போக்கினால் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் சமாதானத் தீர்வுகாணும் விடயம் அசாத்தியமாகிவருகின்றது.**

**- இவ்வாறு முன்னெச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

'தமிழ் நெற்' இணையத்தளத்துக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை தெரிவித்திருக்கின்றார்.

அந்தப் பேட்டியின் முழுவிவரம் வருமாறு:-

கேள்வி: பொதுக்கட்டமைப்பு விடயத்தைச் சர்வதேச சமூகம் பொருத்தமான முறையில் கையாளுகின்றது எனக் கருதுகின்றீர்களா?

*பதில்:* உண்மையில் சொல்லப்போனால் - பொதுக்கட்டமைப்பைப் பொறுத்தவரை - இரு தரப்புமே ஏற்றுக்கொள்ளக்கூடிய யோசனைத் திட்டத்தையே நோர்வே முன்வைத்தது. அந்த யோசனைத் திட்டம் தமிழ் மக்களின் எல்லா எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யாதபோதிலும், எங்கள் மக்களின் மனிதாபிமானத் தேவை

(02ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் இன்று பேரணி

யாழ்ப்பாணம்,மே12

மட்டக்களப்பு - சந்திவெளியில் ஜனநாயக ரீதியில் போராட்டம் நடத்திய அப்பாவிப் பொது மக்கள் மீது அரச படைகள் மேற்கொண்ட அராஜகத்தைக் கண்டித்து இன்று குடாநாட்டில் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறுகின்றது.

இன்று காலை 10 மணிக்கு நல்லூர் கந்தன் ஆலய முன்றிலில் ஆரம்பமாகும் பேரணி கோயில் வீதியிலுள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நிறைவடையும் அங்கு கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கான மகஜர் கையளிக்கப்படும்.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் பெருமளவான பொதுமக்களும் மாணவர்களும் பங்கேற்க விருக்கின்றனர். (த)

## கிளிநொச்சியில் நேற்றும் பேரணி

கிளிநொச்சி,மே 12

மட்டு. - சந்திவெளியில் மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்றும் அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சியிலிருந்து நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேரணியில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்திலும் கிளிநொச்சி செயலகத்திலும் மகஜர் கையளிக்கப்பட்டன. (த-305)

(விரிவான செய்தி 13ஆம் பக்கத்தில்...)

## அரச புலனாய்வாளர் அறுவர் வெளிநாட்டுக்குத் தப்பி ஓட்டம்

கொழும்பு,மே 12

இலங்கை அரச புலனாய்வுத் துறையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் ஆறுபேர் கடந்த சனிக்கிழமை சிங்கப்பூர் ஊடாக ஐரோப்பிய நாடொன்றிற்கு மிக மிக இரகசியமான முறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கல்கிஸை தீவிரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிலாப்தீன், மேஜர் சம்சன் ரட்னாயக்க, கப்டன் நிலாம், மேஜர் முத்தலிப் மற்றும் இராணுவத்துக்குத் தகவல் தருபவர்களான குணபாலன், ராஜேந்திரன் ஆகியோரே

(16ஆம் பக்கம் பார்க்க)

# அரசமைப்புத் திருத்தத்துக்கு மீண்டும் ஜனாதிபதி முஸ்தீபு!

### ஐ.தே.கட்சியின் உயர்மட்டத்தில் ஒருவருடன் மந்திராலோசனை

கொழும்பு,மே 12

அரசியல் அதிகாரத்தில் தனது நிலையைத் தொடர்ந்து தக்கவைத்திருக்கும் எத்தனமாக அரசமைப்பை மாற்றியமைக்கும் முயற்சியை மீண்டும் ஆரம்பித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்று தெரியவருகின்றது.

புதிய அரசமைப்புத் திருத்தங்களுக்கு வழி செய்யும் சட்ட மூலங்களை இன்னும் இரண்டு மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது குறித்து அவர் தீவிரமாக ஆராய்ந்துவருகிறார். இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டத்தில் இருக்கும் தலைவர் ஒருவருடன் சுமார் மூன்றரை மணி நேரம் அவர் கலந்துரையாடியுள்ளார் என அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசமைப்பைத் திருத்தும் இறுதித் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்தழைப்பைப் பெறும் முயற்சிகளில் அவர் தீவிரமாக இருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்தவாரம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குச் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா அங்கு உயர் பதவியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான ஒருவரைச் சந்தித்து மூன்றரை மணிநேரம் உரையாடினாரென்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திவெளியில் மற்றொரு சாவடி நேற்று அதிகாலையில் தீக்கிரை

ஏறாவூர்,மே 12

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் சந்திவெளியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் வீதிச் சோதனைச் சாவடியொன்று நேற்று (புதன்கிழமை) அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சந்திவெளி பொதுச் சந்தைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிக்கே தீ வைக்கப்பட்டுள்ளது. இதனால், இந்தச் சோதனைச் சாவடி முற்றாக எரிந்து நாசமாகியது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாரங்களில் பொதுக்கட்டமைப்பு உருவாகும் என்று ஜனாதிபதி உறுதி

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு மேலும் இருவாரகாலம் எடுக்குமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் முக்கிய வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் தமது முயற்சிக்கு ஆளுங்கட்சிக்குள் ஒரு தரப்பும், பிரதான எதிர்க்கட்சியும் முற்றுமுழுதாக எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றன எனத் தெரிவித்து அதற்குத் தனது விசனத்தையும் வெளியிட்டார் ஜனாதிபதி.

யார் என்ன எதிர்ப்பைத் தெரிவித்தாலும் இன்னும் இருவாரகாலத்திற்குள் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருக்கின்றார் எனவும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் வெகுவிரைவில் உறுதியான ஒரு முடிவுக்கு வர முடியாவிட்டால் முக்கியமான அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுக்கக்கூடுமென்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-க)

## அகாஷி–புலிகள் சந்திப்பு சனிக்கிழமை வன்னியில்

இலங்கை சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்துவார் என கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் நேற்றுத் தெரிவித்தது.

ஒரு வாரகால விஜயமொன்றை மேற்கொண்டு யசூசி அகாஷி நேற்று நள்ளிரவு கொழும்பு வந்து சேர்ந்தார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை அகாஷி சந்திக்கவுள்ளார். எனினும், இதற்கான நேர அட்டவணை நேற்றுமாலைவரை வகுக்கப்படவில்லை.

சந்திப்புக்கு நேரம் கேட்டு ஜப்பானியத் தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் நேற்றுமாலைவரை சம்பந்தப்பட்ட இடங்களிலிருந்தும் அதற்கான பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் நாளைமறுதினம் சனிக்கிழமை அகாஷி வன்னியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்திப்பார் என்பது மட்டும் உறுதியாகியிருப்பதாக கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தின் தொடர்பாடல் அதிகாரியான மட்சுவோ 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

## பொதுக்கட்டமைப்பு உருவானால் இந்தியாவுக்குப் பாதிப்பில்லை உருவாகாவிட்டால் இலங்கைக்குப் பாதிப்பு

### ஐ.தே.கட்சி பிரதிச் செயலாளர் ஜே.வி.பியினருக்குப் பதிலடி

கொழும்பு,மே 12

பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டால் இந்தியாவுக்கு ஆபத்து என்று ஜே.வி.பினர் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். ஆனால், புலிகளுடன் ஓர் உடன்பாட்டுக்கு வராவிட்டால் இலங்கைக்கே ஆபத்து என்பதை அவர்கள் மறந்துவிட்டனர்.

இப்படி ஜே.வி.பியினரை கிண்டலடிக்கிறார் ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

விடுதலைப் புலிகளுடன் அரசு பொதுக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு எதிராக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையில் கடந்த திங்களன்று நடந்த கூட்டத்தில் பெரிதாகப் பேசப்பட்டது. பொதுக்கட்டமைப்பால் இந்தியாவுக்கு ஆபத்து என்று கூறியிருந்தார் சோமவன்ஸ அமரசிங்க.

அது குறித்து உதயனுக்குக் கருத்து வெளியிட்ட போதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நூறு பேரை ஏற்றக்கூடிய 2 படகுகள் நெடுந்தீவுக்கு!

## பிரதமர் உறுதியளித்தார் என்று ஈழவேந்தன் எம்.பி. தகவல்

நெடுந்தீவுக்கான போக்குவரத்துக்கென நூறு பேரை ஏற்றிச்செல்லக்கூடிய இரண்டு படகுகளை வழங்குவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தம்மிடம் உறுதியளித்தார் என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஈழவேந்தன் எம்.பி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் பிரதமரைச் சந்தித்தபோது நெடுந்தீவுப் போக்குவரத்துக்கு 300 பேரை ஏற்றக்கூடிய படகு ஒன்றை வழங்குவதாக அவர் உறுதியளித்திருந்தார். எனினும் இதுவரை அத்தகைய படகு எதுவும் இங்கு வந்து சேரவில்லை.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் பிரதமரைச் சந்தித்து இதனை எடுத்துக் கூறியிருந்தோம். இதனைக் கேட்ட பிரதமர் ஏதோ தவறு நடந்துவிட்டது என்று கூறிவிட்டு எமக்கு முன்னாலேயே பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் பெர்னாண்டோவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி எம்மையும் பேசவைத்தார்.

இன்றைய நிலையில் நூறு பேரை ஏற்றக்கூடிய இரண்டு படகுகளை வழங்குமாறு நாம் கேட்டுக் கொண்டோம். அதற்கு சம்மதித்த பிரதமர் இரண்டு படகுகளையும் உடனடியாக அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்குப் பல்கலை மாணவர் மறியல்

சந்திவெளியில் கடந்த திங்கட்கிழமை பொதுமக்கள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று (புதன்கிழமை) பல்கலைக்கழகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 10 மணிமுதல் 12 மணிவரை இப் போராட்டம் இடம்பெற்றது. இதனால், மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் நேற்று இரண்டு மணி நேரம் வாகனப் போக்குவரத்துத் தடைப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்பாக வீதியில் கூடிய மாணவர்கள் பிரதான வீதியில் ரயர்களை போட்டு எரித்ததுடன். சந்திவெளி சம்பவத்தைக் கண்டிக்கும் வாசகங்களைக் கொண்ட பதாகைகளையும், சுலோக அட்டைகளையும் ஏந்தி நின்றனர்.

மாணவர்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளினால் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளும், விரிவுரைகளும் நேற்று பாதிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-6)

உதவும் நாடுகளின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து

# பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை தமிழ்க்கூட்டமைப்பு வலியுறுத்தும்!

கொழும்பு.மே 12

ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுவதன் அவசியத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலங்கைக்கு உதவும் நாடுகளிடம் வலியுறுத்தவுள்ளது.

இலங்கைக்கு உதவும் நாடுகள் அமைப்பின் மாநாடு எதிர்வரும் 16ஆம். 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறுகின்றது. இதில் கலந்துகொள்ளவரும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடமே நேரில் தாங்கள் பொதுக் கட்டமைப்புக் குறித்து வலியுறுத்தப்போகிறார்கள் என்று தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்கமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டால் வடக்கு-கிழக்கு மீள்கட்டுமானத்துக்கு என உலக நாடுகள் ஒதுக்கும் நிதியை புலிகளிடம் நேரடியாக வழங்க வேண்டும் என்று தாங்கள் வலியுறுத்துவார்கள் என்றும் அவர் கூறினார்.

புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்குமாறு சர்வதேசமே இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது. அப்படியானதொரு நிலையில், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தாமல் உதவும் நாடுகள் இலங்கைக்கு நிதியை வழங்குவதில் பயனில்லை.

''அப்படி - பொதுக்கட்டமைப்பு இல்லாமலேயே- நிதி உதவிகள் வழங்கப்பட்டால்,

வடக்கு - கிழக்குக்கான நிதியுதவி நேரடியாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆழிப்பேரலையால் பெரும் அழிவுகளைச் சந்தித்தது தமிழர் தாயகப் பிரதேசங்களே. அங்கு பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உதவிகள் நேரடியாகக் கிட்டவேண்டும். இதனையே நாம் உலக நாடுகளிடம் வலியுறுத்துவோம்.'' என்றார் மாவை எம். பி.

(த-க)

# ரணில் திடீரென சிங்கப்பூர் பயணம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார். சிங்கப்பூரிலிருந்து அவர் மலேஷியாவிற்கும் செல்லவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருடன், ஐ.தே.க.தவிசாளர் மலிக் சமரவிக்ரமவும் சிங்கப்பூர் சென்றுள்ளார். இன்று மலேஷியா செல்லும் இவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பவுள்ளரென கட்சி வட்டாரங்கள் கூறின.

இந்தப் பயணத்தின் போது சிங்கப்பூரில் 'போர்ட் எலிசபெத்' வைத்தியசாலையில் உடற்பரிசோதனையொன்றையும் ஐ.தே.க. தலைவர் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-க)

# அமைதி வழித் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்பான மோசமான நிலையைக் கருத்தில் எடுத்து, விடுதலைப் புலிகளின் தலைமை அந்த யோசனைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால், அத்திட்டத்துக்கு சாதகமான பதிலை இலங்கை அரசு தராததால் அந்த விடயம் தொடர்ந்து இழுபட்டுச் செல்கின்றது.

தனது பக்கத்தில் இதனை இழுத்தடித்து, அதேசமயம் இந்தத் திட்டத்துக்குத் தெற்கில் எதிர்ப்பைத் தீவிரமடையச் செய்து, அதன்மூலம் இந்த உதவித்திட்டம் நழுவிப் போகும் சூழ்நிலையை இலங்கை அரசு உருவாக்கி வருகின்றது.

எனினும், அனுசரணையாளர்கள் என்ற முறையில் நோர்வே இந்த விடயத்தில் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால், இலங்கை அரசின் நடவடிக்கைகளும், ஆளும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளும் எங்களுக்கு இது விடயத்தில் நம்பிக்கை தருவனவாக இல்லை.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்காமல் திருமதி குமாரதுங்கா தன்பாட்டில் அறிவிப்புகளை விட்டுக்கொண்டிருக்கின்றார். இந்த விடயத்தில் தனது கட்சிக்குள்ளும், தனது அரசுக் கூட்டமைப்புக்குள்ளும் ஓர் இணக்க நிலையை ஏற்படுத்துவதற்கு அவர் எதுவுமே செய்யவில்லை. எங்களைப் பொறுத்தவரை அவரது அறிவிப்புகள் நடைமுறைச்சாத்தியமற்றவை.

சர்வதேச உதவிகளைக் கவருவதற்கும், நடைபெறவிருக்கும் உதவும் நாடுகள் மாநாட்டில் தனக்குச் சாதகமான முடிவுகளை எடுப்பதற்கும் ஏற்றவகையில் உதவும் நாடுகளிடம் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கும் உத்தியாகவுமே தனது இந்த அறிவிப்புகளை அவர் விடுக்கிறார் என நாம் கருதுகின்றோம்.

*கேள்வி:* பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாகும் சாத்தியம் உங்களுக்குத் தென்படுகின்றதா?

*பதில்:* சமாதான நடவடிக்கைகள் ஏற்கனவே முடங்கி நம்பிக்கை தராத நிலையை எட்டியுள்ளன.

சிறிது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான காரணத்தை - வாய்ப்பை- ஆழிப்பேரலைகள் ஏற்படுத்தின.

இந்தச் சந்தர்ப்பங்களைக் கூட இலங்கை அரசு நிராகரித்து, உதாசீனம் செய்திருக்கின்றது. இது பிணக்குக்கு - நாகரிக வழிமுறையில் - அமைதித்தீர்வு காண்பதற்கான சூழ்நிலை இப்போது சாத்தியமானதல்ல என்று என்னை எண்ணத் தூண்டுகின்றது.

*கேள்வி:* இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஈடுபட்டிருக்கும் நிழல் யுத்தம் இப்போது தீவிரமடைந்து வருவதாக ஒரு கருத்து உள்ளதே, இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

*பதில்:* எங்களுக்கு எதிராக நிழல் யுத்தம் ஒன்றை அரசு தீவிரப்படுத்தியிருக்கிறது என்பதை அண்மைக்காலச் சம்பவங்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இந்த நிழல் யுத்தம் எங்களுடைய போராளிகளுக்கு எதிராக மட்டுமல்ல தமிழ் புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இலங்கை அரசுப் படைகளுடன் சேர்ந்தியங்கும் துணைப் படையினரை நிராயுதபாணிகளாக்கி வடக்கு - கிழக்குக்கு வெளியே அப்புறப்படுத்த வேண்டும் என்பதை யுத்த நிறுத்த உடன்பாடு தெளிவாக்கக் கூறுகின்றது. அப்படியிருந்தும் தற்போதைய அரசின்கீழ் இந்த நிழல் யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஆயுதம் தாங்கிய துணைப் படைகள் - குறிப்பாகக் கிழக்கில் - அரச படைகளுடன் சேர்ந்து இயங்குகின்றன. இது யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும், தற்போதைய அமைதிச் சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

### துணைப் படைகளை வைத்து கிழக்கில் நிழல் யுத்தம்

*கேள்வி:* அரசின் நிழல் யுத்தம் எப்படிச் செயற்படுகின்றது?

*பதில்:* கிழக்கைப் பொறுத்தவரை இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நீண்டகாலமாகத் துணைப் படைகளைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் காலத்தில் கிழக்கில் அழிவுகள் ஏற்பட்டதோடு பலர் கொலைசெய்யப்பட்டனர்.

பல துணைப்படைக் குழுக்களை இழந்த இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவு, தனது மறைமுக அழிவு நடவடிக்கைகளுக்கு 'கருணா குழு' என்ற ஒன்றை இப்போது உருவாக்கியிருக்கின்றது. இதில் செயற்படுவோர் இலங்கை இராணுவ முகாங்களில் அல்லது இலங்கை இராணுவ முகாங்களுக்கு அருகில் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளனர். உள்ளூர் வாசிகள் இது குறித்து நன்கு அறிவர்.

எங்களின் பிரசேதம் எமது முழுக்கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், இந்தக் துணைப் படையினரின் செயற்பாடுகள் அரச இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே இடம்பெறுகின்றன. நம்பகரமான பல ஆதாரங்களோடு இது குறித்துப் பலமுறைப்பாடுகளைச் செய்துள்ளோம். இலங்கை அரசின் முழுப் பக்கபலத்தோடு இந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு இயங்குவதால் அவை இரண்டுக்கும் இடையில் நுணுக்கமான முரண்பாடு கூட இல்லை. இலங்கை ஆயுதப் படைகள், ஜனாதிபதியின் திட்டவட்டமான கட்டளைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டே உள்ளன. எனவே, இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் இந்த நடவடிக்கைகள் இலங்கை அரசினதும் ஜனாதிபதியினதும் அங்கீகாரமின்றி நடைபெறுவதற்கு வாய்ப்பேயில்லை.

*கேள்வி:* இது திட்டமிட்டு நடக்கிறது என்பதற்கு உங்களிடம் வேறு ஆதாரங்கள் உண்டா? இதில் ஜே.வி.பிக்கு பங்குண்டு என நீங்கள் சந்தேகிக்கின்றீர்களா?

*பதில்:* இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள் ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளுக்குத் துணையாக உள்ளன. மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது இலங்கை இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது. ஒருவர் கொல்லப்பட்டார். எங்கள் போராளிகள் மீது தாக்குதல்கள் நடக்கின்றன. குழப்பங்கள் ஏற்படுகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளும், அவை நடைபெறும் விதங்களும் அவை இலங்கை இராணுவத்திற்கும், ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளுக்கும் இடையிலான திட்டமிடல்களின் விளைவு என்றே வெளிப்படுத்துகின்றன.

*கேள்வி:* தெற்கில் ஜே.வி.பி. ஒரு பலமான சக்தியாகிவருகின்றது. இதற்கு யார் பொறுப்பு? இலங்கை அரசா அல்லது சர்தேச சமூகமா?

*பதில்:* இதற்கான பொறுப்பு ஜனாதிபதியையும் அவரது அரசையுமே சார்ந்து. ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை ஆரம்பத்திலிருந்தே தெரிவித்துவிட்டது. ஆனால், இலங்கை ஜனாதிபதி ஜே.வி.பியை தனது கூட்டமைப்பின் பங்காளியாக்கி, அதன் வளர்ச்சிக்கு உறுதுணையானார். ஜே.வி.பியின் வளர்ச்சிக்கு இந்த ஜனாதிபதியின் அரசே முழுப் பொறுப்பு என நான் நினைக்கின்றேன். சர்வதேச சமூகம் இந்த நிலையை உணர்ந்து, இந்தப் போக்கைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என எமது மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

*கேள்வி:* 'நிழல் யுத்தம்' எப்படி நிறுத்தப்பட முடியும்?

*பதில்:* சமாதானத்தில் இலங்கை ஜனாதிபதி நேர்மையுடன் சிரத்தை கொள்ளவேண்டும். பற்றுறுதியை வெளிப்படுத்த அவர் தயார் என்றால் இது மிகச் சிறிய விடயம்தான். இந்த 'நிழல் யுத்தம்' ஜனாதிபதியின் திட்டப்படியே மேற்கொள்ளப்படுகிறது. எனவே, தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் அவர் கவனம் கொள்வாராயின் இதனை (நிழல் யுத்தத்தை) நிறுத்துவது அவருக்கு மிகச்சிறிய விடயம்தான். மீறல் சம்பவங்களுக்குப் பொறுப்பான தரப்புத்தான் அந்த மீறல்களை நிறுத்த முடியும்.

### புலிகளுக்கு எதிராக கருத்தியல் யுத்தம்

*கேள்வி:* 'நிழல் யுத்தம்' போல கருத்தியல் யுத்தமும் நடப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனரே?

*பதில்:* இது எங்களுக்கு நன்கு தெரியும். நாங்கள் அண்மையில் ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்தோம். இந்தச் சுற்றுலாவின்போது, சர்வதேச சமூகத்தின் மத்தியில் எம்மைப்பற்றி இலங்கை அரசு தவறான கருத்து நிலைப்பாட்டை பரப்பியிருப்பதை எங்களால் அவதானிக்கமுடிந்தது. எங்கள் மக்களினதும், எங்களின் தலைமைத்துவத்தினமும், திட்டவட்டமான - தெளிவான - நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதன் மூலம் இந்தத் தவறான கருத்து நிலைப்பாட்டை எங்களால் நீக்கமுடிந்தது.

எங்களையும், எங்கள் மக்களினதும் அபிலாஷைகளையும் பாதிப்புற வைப்பதற்காகவே இத்தகைய நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டது என்பதும் -

பிணக்கு அர்த்தமுள்ள - நின்று, நிலைத்து நீடிக்கக்கூடிய - தீர்வு ஒன்றைக் காணும் சர்வதேச சமூகத்தின் ஆதரவில் எந்த மாற்றத்தையும் அது ஏற்படுத்தவில்லை என்பதும் - எங்களுக்கு நன்கு தெரியும்,

கடந்த மூன்று ஆண்டுகளாக மிகக் கடுமையாக நாம் பொறுமை பேணுகின்றோம். அமைதியை எட்டுவதற்காக எல்லா நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம்.

இருபத்தியைந்து வருடப் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நமது மக்கள் மனிதாபிமான உதவிகளைப் பெறவும், வழமையான வாழ்வுக்குத் திரும்பவும் வழிசெய்யும் உகந்த சூழ்நிலையை உருவாக்க நாம் சளையாது உழைத்தோம். ஆனால், இந்த இலக்கு, இலங்கையின் முன்னைய மற்றும் தற்போதைய அரசுகளின் பற்றுறுதியின்மை, சேர்ந்து செயற்படுவதற்கான விருப்பமின்மை ஆகியவை காரணமாக இன்னும் மாயமாகவே தோற்றுகின்றது.

*கேள்வி:* கருத்தியல் யுத்தத்தின் ஒரு பகுதியாக - புலிகளின் விமானங்கள், கடற்புலிகளின் செயற்பாடுகள் போன்றவை யுத்தத்தின் வேறு பரிமாணங்களைப் பயன்படுத்திக் குழப்பத்தைத் தூண்ட முயற்சிக்கப்படுகின்றதே. இது குறித்து உங்கள் கருத்து என்ன?

*பதில்:* கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக எமது தாயகமும், எமது மக்களும் சிங்கள அரசுகளினாலும் அதன் படைகளினாலும் அழிவுகளைச் சந்தித்து வருகின்றனர். எங்கள் மக்களின் 80 ஆயிரத்துக்கும் அதிகமானோரை நாம் இழந்துள்ளோம். தங்களின் தாயகத்திலேயே பல நூறாயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். பத்து லட்சத்துக்கும் அதிகமானோர் வெளிநாடுகளுக்கு ஓடியுள்ளனர். பேரழிவையும், அவலத்தையுமே நாம் எதிர்கொண்டோம். இதுதான் திருப்பித் தாக்க எங்களைக் கட்டாயப்படுத்தியது.

எங்களின் ஆயுதப் போராட்டம் வளர்ந்துள்ளது. எங்களுடைய தாயகப் பூமியை ஆக்கிரமித்திருந்த படைகளை பெரிய பிரதேசத்திலிருந்து வெளியேற்றி, அங்கு பொதுமக்களை மீளக் குடியேற்ற எங்களால் முடிந்திருக்கின்றது. இந்தப் பிரதேசத்தை நாம் ஆளுகின்றோம். எங்களது முழு இராணுவக் கட்டமைப்புகளுக்குமே - அது கடற்புலிகளாகட்டும், விமானப் படையாகட்டும் அல்லது வேறு ஏதாவதாகட்டும் - அனைத்துமே - எங்களது தாயகத்தையும், எமது மக்களையும் பாதுகாத்துப் பேணவே உருவாக்கப்பட்டுள்ளன. வேறு எதாவது நாட்டையோ அல்லது மக்களையோ அச்சுறுத்த உருவாக்கப்பட்டவையல்ல அவை. இவை குறித்து யாரும் மிரளத் தேவையில்லை.

### ஜனாதிபதியில் நம்பிக்கையில்லை

*கேள்வி:* விடுதலைப் புலிகள் மீது தமிழ் மக்கள் போடும் அழுத்தம் என்ன?

*பதில்:* இலங்கை ஜனாதிபதி மீது தமிழ்மக்கள் நம்பிக்கையை முழுதாக இழந்துவிட்டனர். சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் உயிருக்கும், உடைமைக்கும் ஏற்பட்ட மிக மோசமான இழப்புகளைப் போன்று இதற்கு முன்னர் எப்போதும் பாதிப்புகளைத் தமிழ் மக்கள் சந்திக்கவேயில்லை. தமிழ் சமூகம் கூண்டோடு இடப்பெயர்வு, சித்திரவதை, அடிப்படைத் தேவைகளுக்கு எதிரான மனிதாபிமானமற்ற தடை, காணாமற்போதல், பெரும் மனிதப் புதைகுழிகள் போன்ற அனைத்தும் அவரின் ஆட்சியில்தான் இடம்பெற்றன. அவர் குறித்து தொடர்ந்தும் கடும் சந்தேகம் கொண்டுள்ள எமது மக்கள் அவரை வெறுக்கின்றார்கள்.

மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, தமது கடந்தகால அனுபவம் காரணமாக அவர் திருந்துவார் என எதிர்பார்த்து எமது மக்கள் காத்திருந்தனர். ஆனால், அவர்கள் ஏமாற வேண்டியதாயிற்று.

ஏனெனில் -

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஒன்றை எட்டுவதை இழுத்தடிப்பதோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை 'சுனாமி' தாக்கத்தின் பின்னணியில் எமது மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதையும் மறுக்கும் கொடூரத்திலும் அவர் ஈடுபட்டார்.

பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பல அறிவிப்புக்களை அவர் விடுத்தாலும் அது சாத்தியமாவதற்கு ஆக்கபூர்வமான எந்தச் செயற்பாட்டையும் அவர் மேற்கொள்ளவில்லை. எனவே, அவர் மீதான எமது மக்களின் நம்பிக்கையீனம் அதிகம் வளர்ந்துள்ளது.

எங்கள் தலைமைத்துவம் மீதான எமது மக்களின் அழுத்தம் அண்மைய மேதின நிகழ்வுகளில் வெளிப்பட்டது. இலங்கை அரசு அர்த்தமுள்ள தீர்வு ஒன்றைத் தரும் என்பதற்காகத் தாங்கள் இனியும் காத்திருக்கமுடியாது என்பதால் ஒரு தீர்வு ஒன்றை நாடும்படி எமக்கு அழுத்தம் தரும் விதத்தில் பல மகஜர்களை எமது தலைமைத்துவத்துக்கு அவர்கள் அப்போது சமர்ப்பித்தனர்.


*கேள்வி:* மீண்டும் யுத்தம் வெடித்தல் அதன், விளைவு என்னாகும்?

*பதில்:* அது பேரழிவு தருவதாக இருக்கும். எமது மக்கள் மீது போர் திணிக்கப்படுமானால் அதை அவர்கள் விலக்கமுடியாது.

தமது தாயத்தில் கௌரவம், சமாதானம், சுதந்திரம் ஆகியவற்றோடும் அடக்குமுறைக்கு உள்ளாகாமலும் வாழ விரும்பினால் அவர்கள் எதிரிகளை எதிர்கொண்டு தோற்கடிக்கவேண்டும்.

இன்னொரு யுத்தம் இலங்கைத் தீவுக்கு மிகப் பெரியளவிலான அழிவுகளைத்தான் கொண்டுவரும்.

# ஈராக்கில் தொடர் குண்டுவெடிப்புகள்
# ௬0 பேர் உயிரிழப்பு; 100 பேர் காயம்!



குண்டுவெடிப்பில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

பக்தாத்,மே12

**ஈராக்கில் நேற்று இடம்பெற்ற தொடர்குண்டுவெடிப்புகளில் சுமார் 60 பேர் உயிரிழந்துள்ளனர்; நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என இராணுவத்தினர் தெரிவித்தனர்.**

ஈராக்கில் புதிய அமைச்சரவை ஸ்தாபிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்த நிலையில் இத்தொடர் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

தலைநகரின் வடக்கு நகரான டிக்ரிட்டில் சனநடமாட்டம் அதிகமுள்ள சந்தைப்பகுதியில் தற் கொலை கார்க்குண்டு ஒன்று வெடித்ததில் 28 பேர் உயிரிழந்தனர்; 60 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்றும் -

ஈராக்கின் வடக்கு நகரான கிர்குக்கில் இராணுவ ஆட்சேர்ப்பு நிலையமொன்றுக்கு அருகில் ஒரு கார்க்குண்டு வெடித்ததில் சுமார் 19 பொதுமக்கள் உயிரிழந்தனர்; 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் -

தலைநகரின் தெற்கிலுள்ள பொலீஸ் நிலையமொன்றுக்கு அருகில் மற்றொரு கார்க்குண்டு வெடித்ததில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் பிறந்த ஊரான டிக்ரிட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்பை நேரில் பார்த்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில் -

இந்தக் குண்டுவெடிப்பின் போது மக்களின் தலைகள் வேறாக வீசப்பட்டு தொலைவில் விழுந்தன.

சிலரது உடல்கள் சிதறின. பலர் எரிந்தனர். இவ்வாறான கொடூரக் காட்சியை இதற்கு முன்னர் தான் பார்த்ததில்லை என்று கூறினார்.

கடந்த இருவாரங்களில் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட இவ்வாறான கார்க்குண்டுத் தாக்குதல்களில் 400 இற்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்தனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரை நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரிய கிளர்ச்சியாளர்கள் இத்தகைய கொடூரத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேபோன்று பல வெளிநாட்டவர்களையும் பணயக்கைதிகளாக பிடித்து வைத்துள்ள கிளர்ச்சியாளர்கள் அமெரிக்கப் படையினரை வெளியேறுமாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-க)

## ஈராக் மாகாண ஆளுநர் கடத்தல்

பக்தாத்,மே12

ஈராக்கின் மேற்கு மாகாணமான அன்பாரின் ஆளுநர் ராஜா நவாப் கிளர்ச்சியாளர்களினால் கடத்திச்செல்லப்பட்டார் என ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர் காரில் சென்றுகொண்டிருந்தபோது தென் மாகாணத் தலைநகருக்கும் குவாய்ம் நகருக்குமிடையில் வழிமறித்து, கடத்திச் செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கப் படையினர் சிரிய எல்லையின் பாலைவனப் பகுதியில் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதலினால் 100 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். எனச் செய்தி வெளியிட்டு சில மணி நேரங்களிலேயே இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றதென அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆளுநரைக் கடத்திச்சென்று சில மணிநேரங்களில் ஆளுநரின் சகோதரருடன் கிளர்சியாளர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர் என்றும் -

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் உடனடியாக வாபஸ் பெறாவிட்டால ஆளுநர் கொலை செய்யப்படுவார் என அவர்கள மிரட்டினர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஜோர்ஜியாவில் புஷ் உரையாற்றிய மேடையருகே கைக்குண்டு மீட்பு!



ஜோர்ஜியாவில் உரையாற்றும் புஷ்

பிலிசி,மே12

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஜோர்ஜியாவுக்கு விஜயம் செய்த வேளையில் கைக்குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செயலற்ற நிலையில் அக் கைக்குண்டு காணப்பட்டமையால் ஜனாதிபதி புஷ்ஷுக்குகோ அல்லது ஜோர்ஜிய ஜனாதிபதி மில்கெயில் சாகாஸ்விலிக்கோ எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிலிசியின் சுதந்திரச் சதுக்கத்தில் பெருந்தொகையான பொதுமக்கள் மத்தியில் ஜனாதிபதி புஷ் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தவேளை அந்த இடத்திலிருந்து 30 மீற்றர் தூரத்தில் இக்கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

முன்னைய சோவியத் குடியரசின் அங்கமான ஜோர்ஜியாவை விட்டு ஜனாதிபதி புஷ் வெளியேறிச் சென்ற பின்னரே இச் செய்தி அமெரிக்கப் புலனாய்வு சேவையால் பகிரங்கப்படுத்தப்பட்டது.

இச்செய்தி பொதுமக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியதாகத் ஜோர்ஜியாவின் பாதுகாப்புப் பிரிவுத்தலைவர் தெரிவித்தார்.

இம்முயற்சி பொதுமக்களை அச்சமடையவும குழப்பமடையவும் செய்யும் நோக்கிலும் ஊடகத்துறையை உஷார் அடைய வைக்கும் நோக்கிலும் மேற்கொள்ளப்பட்டதென அப் பாதுகாப்புப பிரிவுத் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

இதனிடையே தமது புலனாய்வுச் சேவை அதிகாரிகள் சம்பவ இடத்தில் நிலைமைகளை அவதானித்ததாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி என்ற ரீதியில் ஜோர்ஜியாவில் புஷ் ஆற்றிய உரை முக்கியமானதெனக் கருதப்படுகிறது.

சகல நாடுகளும் ஜோர்ஜியாவின் எல்லை நிர்ணயத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்மெனவும், அப்காசியா மற்றும் தெற்கு ஒஸ்ஸெரியா ஆகிய மாநிலங்கள் தாமாக மொஸ்கோவுடன் இணைந்து கொள்வேண்டுமெனவும் புஷ் தனதுரையில் தெரிவித்தார். (8)

## பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட ரஷ்யா–ஐரோப்பியா ஒன்றியம் திட்டம்

ரஷ்யாவும் ஐரோப்பிய ஒன்றியமும் தமது நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் பாதுகாப்பு போன்ற முக்கியத்துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் தொடர்ச்சியாக பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட திட்டமிட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இது குறித்து நடந்த சந்திப்பின்போது ஐரோப்பாவுடன் ரஷ்யா வைத்திருக்கும் உறவு கேந்திர முக்கியதத்துவம் வாய்ந்தது. அதற்கு முன்னுரிமை உண்டு என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புடின் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

மேலும், ரஷ்யா அதிகளவில் வியாபாரம் செய்வது ஐரோப்பிய ஒன்றியத்துடனேயே என்றும அவர் கூறினார்.

ஆனால் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள சில ஐரோப்பாவுடன் இவ்வாண்டு இணைந்து கொண்டதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் முறுகல் நிலை இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## முன்னாள் வர்த்தக ஆலோசகர்கள் மீது ஜனாதிபதி நெல்சன் மண்டேலா வழக்கு

லண்டன்,மே12

தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, அவரது முன்னாள் வர்த்தக ஆலோசகர்கள் இருவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மண்டேலாவின் அனுமதியின்றி அவரது கலைப்படைப்புகளை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் மீது வழக்குத தொடரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டேலா ராப்பன் தீவில் 27 ஆண்டுகள் சிறையிலிருந்தார். அவர் அதில் 18 ஆண்டுகளை கழித்த போது வரைந்த சில ஓவியங்களையே அவரது முன்னாள் வர்த்தக ஆலோசகர்கள் விற்பனை செய்துள்ளனர் என்றும் -

அந்த ஓவியங்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட பல கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்கள் மண்டேலாவின் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், மண்டேலாவின் குற்றச்சாட்டை அவரது முன்னாள் வர்த்தக ஆலோசகர்கள் இருவரும் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)






## ஈராக்கில் இத்தாலியப் படைகள் தொடர்ந்து நிலைகொள்ளும்

### அந்நாட்டு அரசு அறிவிப்பு

ரோம்,மே12

ஈராக்கில் நிலைகொண்டுள்ள இத்தாலியப் படையினர் அடுத்தவருட ஆரம்பப் பகுதிவரையில் அங்கு நீடிப்பர் என இத்தாலி நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் பணியாற்றிய இத்தாலியப் பிரதிநிதியொருவர் அமெரிக்கப்படையினரின் தாக்குதலில் உயிரிழந்ததைத் தொடர்ந்தே அந்நாட்டு அரசு இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள 3 ஆயிரம் இத்தாலிய துருப்பினரில் 300 பேரை செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் திருப்பியழைத்துக் கொள்ளபடுவர் என அந்நாட்டு அரசு அறிவித்திருந்தது.

இதனைச் செயற்படுத்த வேண்டுமாயின் ஈராக அரசின் பாதுகாப்பு நிலைமை மற்றும் ஆலோசனைகளிலேயே தங்கியுள்ளது என இத்தாலி அரசு இப்போது தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 4 ஆம் திகதி இத்தாலிய பிரதிநிதி அமெரிக்கப் படையினரின் துப்பாக்கிச சூட்டிற்குப் பலியாகினார் என்பது குறிப்பிடத்தககது. (ஐ-க)

உலக அரங்கில்

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிப்பதற்கான பேச்சு தோல்வி

நியூயோர்க்,மே12

'ஜி4' நாடுகளின் தூதுவர்கள் பாகிஸ்தான், இத்தாலி நாடுகளின் குழுவுடன் சந்தித்துத் கருத்து வேறுபாடுகளை களைவதற்காக பேச்சுகள் நடத்தின. நியூயோர்க் நகரில் நடந்த இந்தப் பேச்சுகள் தோல்வியில் முடிந்தன. இருந்த போதிலும் பேச்சைத் தொடர்ந்து நடத்த இரு தரப்பினரும் முன்வந்துள்ளனர். - என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவிபெறுவதற்கு முயற்சிசெய்து வரும் இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேஸில் ஆகிய நாடுகள் சேர்ந்து 'ஜி4' என்ற பெயரில் ஒரு குழுவாகச் செயற்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஐ.நா.பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவதற்கு பாகிஸ்தான், இத்தாலி ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

பாகிஸ்தான் குழுவுக்கு காபி கிளப் குழு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்கு வீட்டோ அதிகாரம் உள்ள சீன ஆதரவு கிடைத்து இருப்பதாக கூறப்படுகிறது. பாகிஸ்தான் குழுவில தென்கொரியா உள்ளிட்ட 12 அல்லது 13 நாடுகள் இடம்பெற்று உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள T.V.S. விக்டர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 6576492, 077 6071143. (45168)

பிறிமா ஒறிஜினல் பேட்டுக்குஞ்சுகளும் (தடுப்பு மருந்து வழங்கப்பட்டவை) முட்டை இடும் சிகப்புப் பேடுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. விக்கி, மூளாய் வீதி (சுப்பிரமணியம் வித்தியாசாலை அருகில்), வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. (45202)

## காணி விற்பனைக்கு

சங்கானை கிழக்கு, அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ.ஞானேந்திரா, சோதி வேம்படி, மானிப்பாய். (Bitsman ரியூட்டறிக்கு அருகில்). (45250)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம். வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமணமாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா.
T.P.: 024 4588410, 0776 630207 (45057)

## தவறிவிட்டது

மீசாலை மேற்கைச் சேர்ந்தவரான எம்.சி. நவரத்தினம் என்பவருடைய முக்கிய ஆவணங்களுடன் இரண்டு மேசைத் திறப்புகள் (அலுவலகத்துக்குரியவை), சிறுதொகைப் பணம் என்பவற்றுடன் 07.05.2005 சனிக்கிழமை மீசாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவீழ்ந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் டச்சுவீதி, வாகையடிச் சந்தி, மீசாலை மேற்கில் ஒப்படைத்துதவவும். (45248)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் தொழில்புரியும், 39 வயது, ஆங்கில உயர்நிலைப் பட்டதாரிக்கு M.A.(Eng.Lit), 29-33 வயதிற்கும் உட்பட்ட, படித்த மணப்பெண் வேண்டும். 7இல் செவ்வாய், சதயம், உயரம் 5'7" ஜாதகம், சீதனம் முக்கியம் இல்லை. தொடர்பு: தங்கமணி சின்னையாபிள்ளை, கேணியடி வீதி, மீசாலை மேற்கு. T.P.077 9084848, 0776102559. (45014)

## ஆட்சேர்ப்புப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே12

பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் 35 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. (8-7)

## திருவிழிப்பு ஆராதனை

கொழும்புத்துறை,மே.12

தூயஆவியானவர் பெருவிழாவையொட்டிய திருவிழிப்பு ஆராதனை யாழ்.பேராலய வளாகத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு 8 மணிமுதல் மறுநாள் அதிகாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

தென்னிந்தியா புதுவாழ்வு செப இல்லத்தில் இருந்து வருகைதந்துள்ள அருட் சகோதரன் ஆரோக்கியநாதன் தலைமையிலான தியானக் குழுவினர் ஆராதனைகளை நடத்துவர்.

இந்தத்திருவிழிப்பு ஆராதனையின் ஆயத்த வழிபாடுகள் நேற்று புதன்கிழமை முதல் நாளை வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

மாலை 5.30 மணியிலிருந்து இரவு 7.30 மணிவரை வழிபாடுகள் யாழ்.மரியன்னை பேராலய வளாகத்தில் நடைபெறும். (8-30)

# கல்வித்தகவல் தளத்திற்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே 12

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்வித் தகவல் தளத்திற்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை திருகோணமலை துளசிபுரத்திலுள்ள தொழில்நுட்ப நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வின் போது கல்வித் தகவல் தளத்திற்கான கணனிப் பதிவு சம்பந்தமான பயிற்சியும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள வலயத் திட்டமிடலுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் கணனித் தரவு இயக்குநர்கள ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (8-7)


## இலவச இளைஞர்களுக்கான பயிற்சி

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம், இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது. 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் 18.05.2005 ஆம் திகதி முதல் 24.05.2005 வரை... 7 நாள்களுக்கு 7.30 மணிமுதல் மாலை 6 மணிவரை ... இலவச உணவுடன்

குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சீட்டுப்பெற்றுக்கொள்ள உடன் கீழ்க்கண்ட இடங்களில் தொடர்புகொள்ளவும்.

பதிவு செய்யும் நேரமும் இடமும்
காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை

நாவலர் மணிமண்டபம், (கந்தசுவாமி கோயில் எதிரில்) யாழ்ப்பாணம் ☎ 222 3893

இந்து சமயப்பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம். தொ.பே.இல.222 6048

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

யாழ்.போன்சொப்
10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி,
(திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

வாழ்க்கையாளர்களே...
பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர் லாப்

வடமராட்சி வீதி (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை.) யாழ்ப்பாணம். 0714168475

யாழ். வீதி, மானிப்பாய். T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com


## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே12

தட்டெழுத்தாளர் மற்றும் பொது எழுதுநர் சேவையில் தரம் இரண்டில் இருப்பவர்களைத் தரம் ஒன்றிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டிப்பரீட்சை அன்று காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (8-7)

## காணாமற்போனோர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே12

1996 ஆம், 1997ஆம் ஆண்டுகளில் அரச படையினரால் கைதாகிக் காணாமல் போனோர் சங்கத்தின் உறுப்பினர்களில், கணவர் கைதாகி காணாமல் போன குடும்பத்தலைவிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 11 மணிக்கு 16, கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள சங்க அலுவலகத்திற்கு தவறாது வருகைதருமாறு செயலாளர் கேட்டுள்ளார். (8)

## வீ... ...ப்பு நன்... ...டை

'செவன' விடமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு வீடுகள் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

பனிப்புலம், அராலி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே இரண்டு வீடுகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும் 20 ஆயிரம் ரூபா நன்கொடையாகத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் வழங்கப்படவுள்ளது. (8-175)

## உபநயன விழா அழைப்பு

அன்புடையீர்!

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில்
நாளை (13.05.2005) வெள்ளிக்கிழமை
காலை 7.21 மணி முதல் 7.57 மணிவரையுள்ள
சுபவேளையில் எமது அன்புப் புதல்வன்

**செல்வன் சோ.சிந்துகேயன்**
அவர்களுக்கு

உபநயனம் செய்து வைப்பதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசகேசரிப்பிள்ளையார் கோயில்.
நீர்வேலி.

(45243)(42-14-34)

சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள்
திருமதி சோ.ஜெயந்தி

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி யசிதா விஜயரத்தினம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1975~01~10 | 2000~05~12 |

எம் நந்தவனத்தில் பூத்திட்ட நறுநல் மலரே
நல் மாலையில் சேருமுன்னே கருகி நீ போனதேனோ?
காலனவனுன் னழகில் கண்வைத்துப் பறித்தானோ?
இறைவனின் பாதமதில் அர்ச்சனை மலராய்
பூசிக்கப் போய் ஐந்து ஆண்டு ஓடிவிட்டதம்மா!

உன் துயரால் வாடும்:
உற்றார்,உறவினர்,
குடும்பத்தினர்.

கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.

(c/42775)(46-14-18-42)


# STUDY IN U.K

For Under Graduate and Post Graduate degrees
(B.B.A., B.Sc., B.A., M.Sc., M.A., M.B.A., L.L.B.)

சகல பாடநெறிகளுக்கும்
CECOS, THAMES VALLEY UNIVERSITY, UNIVERSITY OF EAST LONDON, GATEWAY 2 UK ஆகிய கல்லூரிகளுக்கான
SPOT ADMISSION வசதிகளுடன் நீங்கள் U.K. செல்வதற்கான வழிமுறைகளையும் அனுகூலங்களையும் பற்றிக் கலந்து ஆலோசிப்பதற்கான வாய்ப்பு U.K. பிரதிநிதியை நேரில் சந்திப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு
காலம் 25.05.2005 9.00A.M. - 1.00 P.M AT COLOMBO
For Appointments and Details please contact and confirm between 12th 05.2005 - 20th 05.2005

தொடர்புகளுக்கு: **LONDON ENGLISH COLLEGE**
No.105,ARASADY ROAD, Tel: 2225889

(C/42776)(42-14-34)


## நெஞ்சங்களை விட்டு நீங்காத நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணிடை மலர்ந்தது | விண்ணிடை புகுந்தது |
|---|---|
| 15 - 07 - 1938 | 27 - 04 - 2001 |

**திருமதி சபாரத்தினம் இராசாத்தியம்மா**

திதி: 12-05-2005 (சதுர்த்தி)

*அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
காலமெல்லாம் எமக்காகக் கற்பூரமாய் உங்களைக்
கரைத்து நாமெல்லாம் நல்வாழ்வு வாழ நாடி நின்ற
எம் தெய்வமே! ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
'அம்மா' என்று ஆசையுடன் நாம் அழைத்து மகிழ
நீங்கள் இல்லையே! ஆண்டுகள் நான்கு ஆனாலென்ன
நூறு ஆண்டுகள் ஆனாலும் ஆறுமோ எங்கள் துயர்?
'அம்மா' உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால்
நித்தமும் கலங்கும்:
**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*65, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.*

(45242)(24-14-34-42)


# வேலையாள்கள் தேவையா? வேலை தேவையா?

எமது நிறுவனத்தில் பின்வரும் ஆண்/பெண் வேலையாள்கள் உள்ளனர்.
தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

I. முகாமையாளர்
II. கணக்காளர்
III. விற்பனைப் பிரதிநிதி
IV. மேற்பார்வையாளர்
V. ஆய்வுகூடப் பரிசோதகர்
VI. திட்டமிடல் உதவியாளர்
VII. வரவேற்பாளர்
VIII. சாரதி
IX. நூலக உதவியாளர்
X. பாதுகாப்பு உத்தியோகத்தர்.
XI. எழுது வினைஞர்
XII. ஆசிரியர்
XIII. கணனித் தட்டெழுத்தாளர்/இயக்குநர்
XIV. நிர்வாக உத்தியோகத்தர்
XV. அலுவலகச் செயலாளர்
XVI. மருந்தாளர்
XVII. பிளம்பர்/வயறிங்
XVIII. விற்பனையாளர்
XIX. களஞ்சியக் காப்பாளர்

மற்றும் பின்வரும் வேலைக்கு உடனடியாக ஆள்கள் தேவை.
I. கணனி சம்பந்தப்பட்ட வேலை (DTP, Photo shop, corel draw, page maker)
II. கட்டடத் தொழிலாளி (மேசன், கூலியாள்)
III. பொதி செய்வோர் (பெண்கள்)
IV. வீட்டுப்பணிப்பெண்கள்

மற்றும் அனைத்து வேலைக்கும்
**First man Power Center**
&
**Job Agents**

**Power Gym Building**
230/1, நாவலர் வீதி
(ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.

T.P.:021 222 3298
077-3068984

(C/42778)(46-14-34-42)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# யுத்தத்திற்கான நகர்வுகள் இவை

கடந்த வாரம் "றொய்ட்டர்" செய்தி நிறுவனத்துக்குப் பேட்டியளித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் முக்கியமான விடயம் ஒன்றைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

"இப்போதுள்ள நிலையில் தமிழ் மக்களை மீண்டும் ஆயுதம் ஏந்தச் சொல்லி கொழும்பு கேட்கிறதா என்ற பெரிய கேள்வி எழுந்துள்ளது. இதில் முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு கொழும்பிடம்தான் உள்ளது" - என்று தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டிருந்தார்.

அது வெறும் அரசியல் லாபம் கருதி மொழியப்பட்ட பேச்சு அல்ல. ஆழமும், அர்த்தமும் பொதிந்த விடயங்கள் அக்கூற்றில் உள்ளதை தென்னிலங்கை அரசு புரிந்துகொண்டுள்ளதா என்பது தெரியவில்லை.

ஆனால், தமிழர் தாயகத்தில் நடக்கும் சம்பவங்களும், தென்னிலங்கை அரசியல் நகர்வுகளும் இந்தக் கூற்றின் அடிப்படை ஆழத்தை அரசுத் தரப்பு புரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றன.

இலங்கை அரசியலையொட்டி இப்போது வெளியாகியிருக்கும் தகவல்கள் அமைதி முயற்சிகளைக் குழப்பி, யுத்தத்தை உருவாக்கும் போக்கைத் தூண்டுவனவாகவே அமைந்துள்ளன. 'எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றும்' நடவடிக்கைகளாகவே அவை உள்ளன.

அவற்றில் முதலாவது - உதவும் நாடுகளின் இலங்கை தொடர்பான நிலைப்பாடு சம்பந்தமானது.

மற்றது - வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஆளும் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. கூறுவது.

சரியோ, பிழையோ இன்றைய நிலைமையில் யுத்த நிறுத்தம் குலைந்து போகாமல் தாக்குப்பிடிப்பதற்கு அடிப்படையான காரணங்களுள் முக்கியமானதாக அமைந்திருப்பது சர்வதேச நிர்ப்பந்தமாகும்.

அமைதிவழியில் - சமாதான முறையில் - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் சம்பந்தப்பட்ட தரப்புகள் உறுதியாக உள்ளனவா, இல்லையா என்பது வேறு விடயம். ஆனால், அமைதி வழியில் தீர்வுகாண சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அழுத்தம் கொடுத்து, அந்த வழியில் அவற்றை நிற்க வைத்திருப்பதில் சர்வதேச சமூகத்துக்குக் கணிசமான பங்குண்டு.

அவ்வாறு இலங்கை இனப்பிரச்சினையில் சகல தரப்புகளுக்கும் நியாயமான - நீதியான - இணக்கமான - தீர்வு ஒன்றை அமைதி வழியில் காண்பதற்கு இரு தரப்புகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் தார்மீக உரிமை சர்வதேச சமூகத்துக்கு இருக்கும்வரைதான் அந்த அழுத்தத்துக்குப் பயனும், அதனால் நல்ல பெறுபேறும் கிட்டும். அந்தத் தார்மீக உரிமையை சர்வதேச சமூகம் தானாகவே இழக்குமானால் அதன் அழுத்தம் பயனற்று, செல்லாக் காசாகிவிடும்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காகப் புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அழுத்தத்தை உதவும் நாடுகளில் சிலவே அரசுக்கு கொடுக்கின்றன. பல நாடுகளுக்கு அப்படி அழுத்தம் கொடுப்பதில் சிரத்தை இல்லை என்ற சாரப்பட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இது உண்மையானால், இலங்கை விவகாரத்தில் சர்வதேச அழுத்தம், தமிழர்களைப் பொறுத்தவரை தார்மீக உரிமையற்ற ஒரு விவகாரமாகவே மாறிவிடும்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாவிட்டால் ஆழிப்பேரலை அனர்த்த மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் தமிழர்கள் பாகுபாடு காட்டப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு விடுவார்கள் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி'.

ஆகவே, பொதுகட்டமைப்பை ஏற்படுத்துவதில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க மறுக்கும் சர்வதேச சமூகம், ஆயுதவழி விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு, அமைதி வழியில் தீர்வுகாண வாருங்கள் என்று தமிழர் தரப்புக்கு அழுத்தம் கொடுக்கும் தார்மீக உரிமையையும், அருகதையையும் இழந்து விட்டது என்ற நிலைப்பாட்டுக்கே தமிழர்கள் வருவார்கள். சர்வதேச சமூகத்தின் இத்தகைய அழுத்தத்தை ஒதுக்கி, உதாசீனப்படுத்தித் தம்பாட்டில் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலை தமிழர் தரப்புக்கு ஏற்படும்.

இன்றைய நிலையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரித்து, அவற்றுக்குத் தனித்தனியாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி கோருகின்றது. இந்த அழுத்தத்துக்கு அடிபணிய அரசு முயலுமானால், ஆயுதப் போரை மீண்டும் தொடங்கித் தமது விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வதைத் தவிர தமிழ்ப் போராளிகளுக்கு வேறு வழியே இல்லாமல் போய்விடும்.

இந்த நிலைப்பாடுகள், அறிவிப்புகள், யுத்த நிறுத்தத்தினால் அடங்கி அமைதியில் மூழ்கியிருக்கும் நாட்டை மீண்டும் கொடூர யுத்தகளத்திற்கு இறங்கச் செய்யும் நகர்வுகளாகவே தென்படுகின்றன.

# உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு முதன்முதலாக இம்முறை இலங்கையில்

## கண்டியில் எதிர்வரும் 16, 17இல் நடைபெற ஏற்பாடு

கொழும்பு,மே12

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள[illegible]ங்கிய மாநாடு எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்க் கிழமைகளில்) கண்டியில் நடைபெறும். இதற்கா[ன] சகல ஏற்பாடுகளும் நிறைவு செய்யப[்பட்]டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வழமையாக ஐரோப்பிய நாடுகளிலேயே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற்று வந்துள்ளன. ஆனால், இப்போது முதன் முறையாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கோரிக்கையின் பேரில் - இலங்கையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில், இலங்கைக்கு உதவிவழங்கும் 45 நாடுகளின் பிரதிநிதிகளையும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய யூனியன் போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி 245 பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளமாட்டார். எனினும், ஐ.நாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி ஒருவர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார் என நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

16ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கண்டி ஏர்ளன்ஸ் ரீஜன்ஸி ஹோட்டலில் மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவமும், 16ஆம் திகதி கண்டி மாவெலி ரிச்ஹோட்டலில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடும் நடைபெறும்.

ஜப்பானில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபாவுக்கான உதவிகள் இன்று வரை இலங்கைக்குக் கிடைக்கவில்லை.

இதனைப் பெறுவதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட பிரயத்தனங்கள் எதுவும் வெற்றியளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமாதான முன்னெடுப்புகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இந்த உதவியின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அறிக்கையை இந்த மாநாட்டில் இலங்கை சமர்ப்பிக்க வேண்டும் என உதவி வழங்கும் நாடுகளில் சில வலியுறுத்தி உள்ளன என்று வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-க)

# சர்வதேச சமூகத்தின் ஆதரவைக் கோருகிறார் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு,மே 12

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசு உருவாக்கவுள்ள பொதுக்கட்டமைப்பிற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை ஜனாதிபதி கோரியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் கொழும்பிலுள்ள முக்கியமான வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்த போதே ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்தார் என்று அறியப்படுகிறது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்புக் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விரிவாக விளக்கமளித்த ஜனாதிபதி, இது தொடர்பில் எழுந்துள்ள அரசியல் சூழ்நிலை குறித்தும் எடுத்துக் கூறியிருக்கிறார். அரசின் இந்த முயற்சியானது தடைப்பட்டுப் போயுள்ள அமைதி முயற்சிகளை முன்னெடுக்க உதவுமென்றும் ஜனாதிபதி அங்கு நம்பிக்கை வெளியிட்டார்.

உத்தேச பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் எதிர்ப்பு மற்றும் அது தொடர்பிலான இதர கட்சிகளின் நிலைப்பாடு என்பன குறித்து வெளிநாட்டுத்தூதுவர்கள் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் வினவினர் என்று தெரியவருகிறது.

எவ்வாறு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும் இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தை முன்னெடுப்பதில் தாம் உறுதியாக இருக்கிறார் என ஜனாதிபதி இங்கு தெரிவித்ததாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் கூறின.

(ஐ-க)

# ஊடகவியலாளர் சிவராம் நினைவாக சென்னையில் நடந்த அஞ்சலிக் கூட்டம்

சென்னை,மே12

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் அஞ்சலிக் கூட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை மைலாப்பூர் ஸ்ரீநிவாசா மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மனித உரிமைகள் முன்னேற்றக் கழகத்தினரும் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்களும் இணைந்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

தமிழ்நாடு மனித உரிமைகள் முன்னேற்றக் கழகத்தின் இணைப்பாளர் ரி.எஸ். எஸ். மணி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பி.பி.ஸி. செய்தியாளர் ரி.என். கோபாலன், டெக்கான் ஹெறால்ட் பத்திரிகையைச் சேர்ந்த முராஜி, பயனியர் பத்திரிகையைச் சேர்ந்த வெங்கட் ரமணன் ஆகியோரும் -

சென்னையில் பயிற்சிக்காகத் தங்கியுள்ள யாழ்.ஊடக வளங்கள் பயிற்சி நிலைய மாணவர்களான செய்தியாளர்களான ந.பரமேஸ்வரன், ஆர்.தயாபரன், க.வேல்தஞ்சன் ஆகியோரும் அஞ்சலி உரைகளை வழங்கினர்.

"ஈழத்தமிழர் வரலாறு, போராட்டம் [ப]ற்றியெல்லாம் ஆழமான புலமை கொண்டிருந்தவர் சிவராம். இலங்கைப் பிரச்சினை தொடர்பான எந்த ஒரு தகவலையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது" - என்று செய்தியாளர் ரி.என்.கோபாலன் தனது அஞ்சலி உரையில் குறிப்பிட்டார்.

மைலாப்பூரில் நடைபெற்ற இந்த அஞ்சலிக்கூட்டம் தொடர்பான சுவரொட்டிகள் அப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்தன.

தமிழகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ஐ)

# குறைபாடுகள், தேவைகளை இனங்காண பாடசாலை மட்டத்தில் கருத்தரங்குகள்

வலிகாமம்,மே12

நாடளாவிய ரீதியில் உள்ள ஆசிரிய நிலையங்கள், பாடசாலைகள் மட்டக் கருத்தரங்குகளை முன்னெடுத்து பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளைச் சீர்செய்ய உள்ளன.

வலயக் கல்வி அலுவலகங்களூடாக வளவாளர்களை ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அழைத்துச் சென்று அப்பாடசாலையின் சகல ஆசிரியர்களுடனும் கலந்துரையாடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஆசிரியர்களுடனான சந்திப்புக்கு முன்னர் ஒவ்வொரு பாடசாலைகளிலும் நிலவும் பிரச்சினைகள், குறைபாடுகள் என்பவற்றைக் கேட்டறிந்து கொண்ட பின்னர் ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனி நாள்களைக் குறித்து அந்த நாள்களில் அப்பாடசாலைக்கு வலயக்கல்வி அலுவலர்களும், வளவாளர்களும் சென்று பாடசாலைகளின் சகல ஆசிரியர்களையும் இணைத்துக் கலந்துரையாடல்களை நடத்துவர்.

அந்தவகையில், வலிகாமம் கல்வி வலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முதலாவது கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அதன் அதிபர் தலைமையில் சகல ஆசிரியர்களுடனும் 'கற்றல் இடர்பாடுள்ள மாணவர்களை அணுகுதல்' என்ற தலைப்பில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இவ்வாறான கலந்துரையாடல்கள் அந்தந்தப் பாடசாலைகள் முன்வைக்கும் பிரச்சினைகளின் தலைப்பில் தொடர்ந்து நடத்தப்படும்.

இதே மாதிரியான கருத்தரங்குகள் இம்மாதம் 21 ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல், நவோதய கல்லூரியிலும், 23 ஆம் திகதி அளவெட்டி அருணோதயக்கல்லூரியிலும் 24 ஆம் திகதி மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

(ஐ-152)

**நாளை**

*சித்திரை 30*
*வெள்ளிக்கிழமை*
*13.05.2005*
திதி : *பஞ்சமி*
*முன்னிரவு 08.13 வரை*
நட்சத்திரம் : *புனர்பூசம்*
*பின்னிரவு 04.50 வரை*
*சுபநேரம் : 05.54 - 07.24*
*ராகுகாலம்: 10.24 - 11.54*
*(யாவும் பழைய நேரப்படி)*

# தேசிய அடையாள அட்டை பெற புதிய நடைமுறைகள் அறிவிப்பு

## வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியது

வலிமேற்கு,மே12

தேசிய அடையாள அட்டை விநியோகம் தொடர்பாகப் புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பாகப் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் கட்டளை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க 1386/17 ஆம் அதிவிசேட வர்த்தமானியொன்றைக் கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி வெளியிட்டுள்ளார்.

வர்த்தமானியில் ஒழுங்கு விதிகள் 2005 ஆம் ஆண்டின் ஆள்களைப் பதிவு செய்தல், ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதில் சகல விவரங்களும் வெளியிடப்பட்டிருப்பதுடன், விண்ணப்பப்படிவத்தின் மாதிரியும் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள விண்ணப்பப்படிவங்களுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டதாக அது தயாரிக்கப்பட்டுள்ளது. நிழற்படம் வர்ண நிழற்படமாக மாற்றப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிய நடைமுறை தொடர்பாகப் பிரதேச செயலகங்களுக்கு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் இதுவரை சுற்றறிக்கை எதுவும் அனுப்பிவைக்கப்படவில்லை. வர்த்தமானி மட்டும் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(8-175)

**உதயவாக்கு**

தூரத்தில் உள்ளதை எதிர்பார்த்து அருகில் உள்ளதை அலட்சியம் செய்யாதே!

– *கிரீஸ் பழமொழி*

# ஜனாதிபதியையும் ஜே.வி.பியினரையும் வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கிவிட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சொல்கிறார்

கொழும்பு,மே12

"சிறுபிள்ளைத்தனமாக அரசியல் நடத்தும் ஜனாதிபதியையும், அவருடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் ஜே.வி.பியினரையும் வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கிவிட்டது. சகல மக்களுக்கும் உரிய அரசொன்றை நிறுவும் தகுதி ஐ.தே.கவுக்கு மட்டுமே உண்டு" - என்று கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்கள் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் தலைமையுரை ஆற்றியபோதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

அரசு தனது நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் தம்மை வீட்டுக்கு அனுப்பும் சகல தகுதியும் மக்களுக்கே உண்டு என ஜனாதிபதி கூறினார். அவர் கூறியதுபோல் நாட்டுமக்கள் அவரின் அரசுக்கு எதிராக இப்போது அணி திரண்டுள்ளனர். மக்கள் ஐ.தே.கவின் கொள்கைகளை ஆதரிக்கின்றனர். அப்படியெனில் நாம் ஆட்சியைக் கைப்பற்றும் காலம் நெருங்கிவிட்டது - என்றார் ரணில். (ஐ-க)

# மனித உரிமை செயலகம் கண்டனம்

வாழைச்சேனை, சந்திவெளியில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டித்து கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

"அமைதியான முறையில் அதிகார பீடத்திற்கு எதிரான வாசக அட்டைகளை ஏந்துதல் எக்காலத்திலும் மறுக்கப்பட முடியாத அடிப்படை ஜனநாயக உரிமையாகும். ஆயுதம் அற்ற மக்கள் தங்கள் அடக்குமுறை நிலையை மாற்றுவதற்காகக் கையாளக்கூடிய ஒரே மார்க்கம் இதுவாகும். அமைதியான முறையின் ஊடாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது முதன்மையான கருவியுமாகும். சர்வதேச சமூகத்தின் ஆசீர்வாதத்துடன் வடக்கு - கிழக்கு மக்கள் அடக்குமுறைகளைச் சமாதான வழியில் தீர்க்கும் நடைமுறைகளை முழுமனதுடனும் நம்பிக்கையுடனும் முன்னெடுக்கின்றனர்.

"இத்தகைய சமாதான ஊர்வலங்களை நடத்தும் மக்களை மனிதாபிமானமற்ற வகையில் சுட்டுக்கொன்றால் மக்கள் எங்கே செல்வார்கள்?" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

## வீடியோ, புகைப்படப் பிடிப்பாளர்களை பதிவுசெய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே12

யாழ். மாவட்டத்திலுள்ள இதுவரை பதிவை மேற்கொள்ளாத வீடியோ, புகைப்படப் பிடிப்பாளர்களை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட ஒளிக்கலை ஒன்றிய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

பதிவுசெய்யும்போது முத்திரை அளவிலான 3 புகைப்படங்களையும் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (8-202)

## சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மே12

யாழ். வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலய சைவசமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்புவிழா இன்று வியாழக்கிழமை மாலை 430 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இப்பரிசளிப்பு விழாவில் செல்வன் கு.பாலசண்முகன், பண்டிதர் வ.பேரின்பநாயகம், சிவநெறிக கலாநிதி இராசையா ஸ்ரீதரன், செல்வன் இ.பகீரதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களைப் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் வழங்குவார். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (8)

## வாய் பேசமுடியாத பெண்ணுக்கு சைக்கிள் அன்பளிப்பு

வலி.தெற்கு,மே12

வாய் பேசமுடியாத பெண் ஒருவருக்கு யாழ்ப்பாணம் 'நியந்த்ரீ' அமைப்பு சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெற்ற 'நியந்த்ரீ'யின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில், கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த திருமதி பாலச்சந்திர சர்மா கலைச்செல்வி என்பவருக்கே சைக்கிள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

'நியந்த்ரீ'யின் புதிய தலைவரும் சண்டிலிப்பாய் பிரதேச செயலருமான ஆ.சுப்பிரமணிய சர்மா இதனை வழங்கினார்.

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்களுக்கு 'நியந்த்ரீ' சார்பில் சான்றிதழ்களும் வெகுமதிப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-152)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கடமையேற்றார்

வலி.தெற்கு,மே12

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலராக திருமதி ரூபினி வரதலிங்கம் இடமாற்றம் பெற்று கடந்த திங்கட்கிழமை முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிவந்த ஆ.சுப்பிரமணிய சர்மா தமது 60 ஆவது வயதில் ஓய்வுபெற்றபின் திருகோணமலை மாகாணத் திணைக்களத்துக்கு மீள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் உதவிச செயலாளராகக் கடமையாற்றிவந்த திருமதி ரூபினி வரதலிங்கம் சண்டிலிப்பாய் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுள்ளார். (ஐ-152)



பிரிட்டன் வாழ். தென்மராட்சி மக்களிடம் சேகரிக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தில் ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன், யாழ். பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆர்.டேவிட் ஆகியோர் நிற்பதையும் காணலாம். *(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*

## ஐ.தே.க மாநாட்டில் அரச ஊடகங்களுக்கு கதவடைப்பு

கொழும்பு,மே12

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்கள் மாநாட்டில் அரச ஊடகங்களுக்குக் கதவடைப்பு செய்யப்பட்டது.

ஐ.தே.கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவிலில் நடைபெற்ற அக்கட்சியின் அமைப்பாளர் மாநாட்டையொட்டிய செய்திகளைச் சேகரிக்கச் சென்றிருந்த அரச ஊடகங்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் எவரும் மாநாட்டு மண்டபத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

ஐ.தே.கவின் முக்கிய கூட்டங்களுக்கு அரச ஊடகங்களை அனுமதிக்கக்கூடாது என் அக்கட்சியின் உயர்மட்டம் முடிவுசெய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஐ.தே.கவிற்கு எதிரான செய்திகளை மட்டும் அரச ஊடகங்களில் வெளியிடுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என ஐ.தே.க. வட்டாரங்கள் தமது முடிவுக்கு நியாயம் கற்பிக்கின்றன. (ஐ-க)

## பொதுக்கூட்டங்கள்

சுழிபுரம்,மே12

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது. (8-28-202)

✦✦✦

தென்மராட்சி,மே12

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (117-202)

## 'சுகாதாரப் பொதி' வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே12

வறிய தாய் - சேய்களின் பற்சுகாதாரத்தைப் பேண 'சுகாதாரப் பொதி' இலவசமாக வழங்கப்படவுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபைத் திட்டமிடற் பிரிவு இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி இவ்வாண்டு இந்த 'சுகாதாரப் பொதி' வழங்குவதற்காக சாந்தை கிராமத்தைத் தெரிவுசெய்துள்ளார்.

இதன் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 100 வறிய சிறுவர்களுக்கும் தாய்மார்களுக்கும் 'சுகாதாரப் பொதி' வழங்கப்படும்.(ஐ-185)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே12

வேலணை மேற்கு பெரியபுலம் அருள்மிகு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் ஆலயப் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிசேக மண்டலப் பூர்த்தி நாளும், மகாசங்காபிசேகமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளன.

மகாகணபதிப் பிள்ளையாருக்கு நவோத்திர சகஸ்ர சங்காபிசேகமும் பரிவார மூர்த்திகளுக்கு அஷ்டோத்தர சத சங்காபிசேகமும் இடம்பெறும்.

தொடர்ந்து 12 மணியளவில் கொடியேற்றத்துடன் பெருந் திருவிழா ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறும்.

பிற்பகல் ஒரு மணியளவில் மகா கும்பாபிசேக மலர் வெளியீடு இடம்பெறும்.

பெரும் திருவிழாவில் எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (8-203)

★★★

வலி.தெற்கு,மே12

கந்தரோடை அருள்மிகு அருளானந்த விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (8-152-203)

★★★

வலி.தெற்கு,மே12

பருத்தித்துறை ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயப் புனராவர்த்தன நவகுண்டபட்ச அஷ்டபந்தன பிரதிஷ்டா மகாகும்பாபிசேக விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிசேகத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 7 மணிதொடக்கம் மாலை 6 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

கும்பாபிசேக தினத்தன்று நல்லைக் குருமணி சோமசுந்தர ஞானசம்பந்த பரமானந்த சுவாமி அருளுரை வழங்குவார். கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிசேகம் நடைபெறும். (8-152-203)

★★★

தென்மராட்சி,மே12

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் இரவு 8 மணிக்கு சிவனருட்செல்வர் இரா.செல்வவடிவேல், இ.செந்தூர்ச்செல்வன் ஆகியோர் 'கந்தன் கருணை' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பொழிவுகளின் முடிவில் கேள்விகள் கேட்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுமெனவும் உற்சவ இறுதிநாளன்று சமய அறிவுப் போட்டியும் நடத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-117-203)

★★★

யாழ்ப்பாணம்,மே12

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த பொங்கல் விழாவில் பல்வேறு இடத்திலிருந்து வரும் பெரும் திரளான மக்கள் அம்பாளுக்குப் பொங்கல்செய்து வழிபடுவர்(8-203)

★★★

யாழ்ப்பாணம்,மே12

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

24 ஆம் திகதி காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து கந்தரனுபூதி மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறும். (8-28-204)

★★★

வலி.தெற்கு,மே12

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெரும்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (8-152-203)

★★★

வலி.தென்மேற்கு,மே12

பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை திருத்தல வருடாந்தத் திருவிழாத் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும், காலை 7.30 மணிக்குத் திருநாள் திருப்பலியும், நண்பகல் 12 மணிக்கு நோயாளர்களுக்கான திருப்பலியும் பிற்பகல் 4.30 மணிக்கு இளைஞர், யுவதிகளுக்கான திருப்பலியும், மாலை 6 மணிக்கு நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த உற்சவ காலத்தில் அருட்திரு.ஜெ.ஜெறோம் லம்பேட் (அ.ம.தி.) அடிகள் மறையுரை நிகழ்த்துகிறார். (8-135-202)

★★★

தொல்புரம்,மே12

தொல்புரம் மத்தி கொட்டியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை, மாலை ஆலயத்தின் சகல மூல மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும், பூசை, தீபாராதனைகளும் இடம்பெறும். தொடர்ந்து வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும். தேர்த் திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கும், அன்றைய தினம் மாலை தீர்த்தத் திருவிழாவும், இரவு 7.30 மணிக்குக் கொடியிறக்கமும் இடம்பெறும். (எ-119)

★★★

சாவகச்சேரி,மே12

மட்டுவில் தெற்கு அருள்மிகு வேரங்கேணி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

வேட்டைத்திருவிழா 21 ஆம் திகதியும் தேர்த்திருவிழா 22 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 23 ஆம் திகதியும் நடைபெறும்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில் பெரும் திருவிழா நடைபெறும். (எ-31)


சென்.மேரீஸ் விளையாட்டுக்கழகம்


மனோகரா விளையாட்டுக்கழகம்

### எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்:

# இன்றைய அரையிறுதி ஆட்டத்தில் மனோகரா - மேரிஸ் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம்,மே12

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் லீக் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 2 ஆவது அரை இறுதி ஆட்டம் இன்று நடைபெறுகின்றது.

இன்று இரவு 7மணிமுதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென்.மேரிஸ் வி.க. அணியும் மனோகரா வி.க.அணியும் மோதுகின்றன.

குடாநாட்டில் பலம் வாய்ந்த அணிகள் மோதும் இந்த ஆட்டம் விறுவிறுப்பாக அமையும் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இறுதிப் போட்டிக்குச் செல்லும் அணி என்ற பலப்பரீட்சையில் இரு அணிகளும் ஈடுபடவிருக்கின்றன.

இந்த ஆட்டத்தை அடுத்து 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆட்டம் இடம்பெறும்.

இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கும் வலிகாமம் லீக்கும் மோதுகின்றன.

நாளை நடைபெறும் 3ஆம் இடத்துக்கான ஆட்டத்துடன், காட்சி உதைபந்தாட்டம், மகளிர் மட்டும் பங்குபற்றும் உதைபந்தாட்டம் ஆகியன இடம்பெறவிருக்கின்றன. (3)

# யாழ்.வலய ஆரம்பப் பிரிவு மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே12

யாழ்கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மெய்வன்மைப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**13 வயதுப்பிரிவு**

**ஆண்கள்**

75 மீற்றர் - வி.மதியுகன் (கோப்பாய் சரவணபவானந்தா வித்தி.), ஆர்.விதுஷன் (சென்.ஜோன் பொஸ்கோ), எம்.மயூரன் (சென்.ஜேம்ஸ் ம.வித்தி.).

100 மீற்றர் - ஆர்.விதுஷன் (சென்.ஜோன் பொஸ்கோ), வி.மதியுகன் (கோப்பாய் சரவணபவானந்தா வித்தி.), ஜே.மயூரன் (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.).

நீளம் பாய்தல் - எஸ்.மதூசன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), எம்.கௌரங்கன் (சென்.ஜோன் பொஸ்கோ), எ.டினோசன் (நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தி.).

உயரம் பாய்தல் - ஜே.மயூரன் (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி), கே.சுதர்சன் (பெரியபுலம் ம.வித்தி), வை.சுதர்சன் (சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை).

**பெண்கள்**

75 மீற்றர் - எஸ்.தர்ஷனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆர்.கே.ஏ.பிரியங்கா (சென்.ஜோன் பொஸ்கோ வித்தி), எஸ்.சுபஜனனி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை).

100 மீற்றர் - வி.துர்க்கா (நல்லூர் காசிப்பிள்ளை வித்தி.), ஆர்.பிரியங்கா (சென்.ஜோன் பொஸ்கோ), எஸ்.சிந்துகௌரி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை).

உயரம் பாய்தல் - எ.பிரியா (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தி.), எஸ்.பிரியங்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.திவ்யா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

நீளம் பாய்தல் - ஜோய் காருண்யா மகேந்திரன் (சென்.ஜோன் பொஸ்கோ), ஜே.ஜெனுசா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), வி.துர்க்கா (நல்லூர் காசிப்பிள்ளை வித்தி.).

**13 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

100 மீற்றர் - எ.கவாஸ்கர் (சென்.பற்றிக்ஸ்), எஸ்.அனோஜன் (சென்.பற்றிக்ஸ்), எஸ்.சொலமன் (சென்.ஜோன்ஸ்).

200 மீற்றர் - என்.தனுஷன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), ரி.டிலக்ஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.ஹரிகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

உயரம் பாய்தல் - எஸ்.விதுஷனன் (யாழ்.மத்திய கல்லூரி), என்.நிரோஜன் (கோப்பாய் நாவலர் வித்தி.), எஸ்.லியான் (சென்.பற்றிக்ஸ்).

நீளம் பாய்தல் - டி.எல்.ஜோய் யஸ்ரியல் (சென்.ஜேம்ஸ் ம.வித்தி.), எம்.மரியரூபன் (சென்.ஜோசப் வித்தி.), எ.கவாஸ்கர் (சென்.பற்றிக்ஸ்).

4X100 அஞ்சல் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, ஆவரங்கால் நடராஜா ராமலிங்கம் வித்தியாலயம்,

**பெண்கள்**

100 மீற்றர் - ரி.மதுரா (திருக்குடும்பக் கன்னியர்மடம்), வி.கார்த்திகா (அத்தியார் இந்துக் கல்லூரி), பி.ஐஸ்வரியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

200 மீற்றர் - வி.கார்த்திகா (அத்தியார் இந்துக் கல்லூரி), ரி.மதுரா (திருக்குடும்பக் கன்னியர் மடம்), எம்.கம்ஷிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

நீளம் பாய்தல் - வை.நிலூசா (பெரியபுலம் ம.வித்தி.), எஸ்.துவாரகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எ.சுகந்தினி (சென்.றொக் றோமன் கத்தோலிக்க வித்தி.).

உயரம் பாய்தல் - பி.வினோதினி (வேம்படி இந்து மகளிர் கல்லூரி), ஜே.மயூரா (கோப்பாய் நாவலர் வித்தி.), எம்.ரதிகாந்தி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

4x100 அஞ்சல் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், இந்து மகளிர் கல்லூரி.

(த-203-190)

## மாவட்ட மட்ட தடகளப் போட்டிகள் வட்டுக்கோட்டையில் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டிகளின் மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

கோட்டமட்டத்தில், பின்னர் வலய மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகள் இந்த மாவட்டப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இந்தப் போட்டிகளில் முதலிரு இடங்களைப் பெறும் பாடசாலை அணிகள் மாகாணப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதிபெறும்.

மாவட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றும் தூர இடத்து மாணவர்களுக்குத் தங்குமிடவசதி செய்துதரப்படும் என்றும் -

தங்குமிட வசதி தேவைப்படும் மாணவர்களின் விவரங்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுக் குழுச் செயலாளர் வியாலசிங்கம் கேட்டுள்ளார்.

(3-190)

# தென்மராட்சி செயலர் பிரிவில் வளர்மதி வி.க. சம்பியனானது

கொடிகாமம், மே12

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் அதிகபுள்ளிகளைப் பெற்று வெற்றிபெற்றுப் பிரதேசச் சம்பியனாகியது.

இந்தப் போட்டிகள் கடந்த 08 ஆம் திகதி கொடிகாமம் நாவலர் அ.த.க. பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இந்த வைபவத்தில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்புவிருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனும் கலந்துகொண்டனர்.

போட்டிகளின் முடிவுகள் விவரம் வருமாறு:-

**கிரிக்கெட்**

ஆண்கள்- கைதடி சரஸ்வதி வி.க., நாவற்குழி மிக்பூட் வி.க.

பெண்கள்- சாவகச்சேரி தென்னகத்தாரகை வி.க., நாவற்குழி பிக்பூட் வி.க.

**எல்லே**

ஆண்கள் - மட்டுவில் வளர்மதி வி.க., மட்டுவில் கதிரொளி வி.க.

பெண்கள் - மட்டுவில் வளர்மதி வி.க., மட்டுவில் கதிரொளி வி.க.

**கரபந்தாட்டம்**

ஆண்கள் - மட்டுவில் மோகனநாஷ் வி.க., மட்டுவில் வளர்மதி வி.க.

பெண்கள் - கொடிகாமம் முடியப்பு வி.க., சாவகச்சேரி ஸ்ரீ முருகன் வி.க.

**உதைபந்தாட்டம்**

ஆண்கள்- மட்டுவில் வளர்மதி வி.க., நாவற்குழி பிக்பூட் வி.க.

பெண்கள்- நாவற்குழி பிக்பூட் வி.க., மட்டுவில் வளர்மதி வி.க.

**வலைபந்தாட்டம்**

கொடிகாமம் முடியப்பு வி.க., வரணி மதியொளி வி.க.

சிறந்த வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

சிறந்த தடகள வீரன் - இ.ரஜீஷ் (பாரதி வி.க.), சிறந்த கள வீரன் - எஸ்.லோஜிதன் (மட்டுவில் வளர்மதி வி.க.).

சிறந்த தடவீராங்கனை - வி.மயூரி (கொடிகாமம் முடியப்பு வி.க.), சிறந்த கள வீராங்கனை -எ.பிறின்சி (மிருசுவில் சென்.நீக்கிலஸ் வி.க.).

இவ்வருடத்திற்கான சிறந்த விளையாட்டு வீரனாக வளர்மதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.லோஜிதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

(3-74-203)


இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் திக்கமுனை மைதானத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வீரர்கள், பிரதமவிருந்தினரான டாக்டர் எஸ்.மயிலேறும்பெருமாளுக்கு அறிமுகம் செய்யப்படும்போது.......

*(படம்:எஸ்.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

# மேஜர் மாறன் நினைவாக மின்னொளியில் கரபந்தாட்டம்

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் மேஜர் மாறன் நினைவாக கரபந்தாட்டச் "சுற்றுப்போட்டி மின்னொளியில் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த திட்கட்கிழமை ஆரம்பமான இச்சுற்றுப் போட்டியில் 14 பாடசாலை அணிகளும் 18 கழக அணிகளும் பங்குபற்றுகின்றன.

பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் தினமும் போட்டிகளைப் பார்வையிடத் திரண்டு வருகின்றனர்.

கடந்த இரு தினங்கள் இடம்பெற்ற ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**முதல்நாள்**

★ பாடசாலை அணி - கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிக்கும் தர்மபுரம் ம.வி. அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் 2 : 0 என்ற செற கணக்கில் தர்மபுரம் ம.வி. அணி வெற்றி.

★ புனித பற்றிமா வித்தியாலய அணிக்கும் கனகபுரம் ம.வி. அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் 2:0 என்ற செற் கணக்கில் கனகபுரம் ம.வி. வெற்றி.

★ கழக அணி - சோலை வி.க. அணியும் இளந்தென்றல் வி.க. அணியும் மோதியதில் 2:0 என்ற செறகணக்கில் இளந்தென்றல் வி.க. அணி வெற்றி.

★ அப்பரால் வி.கவும் நியூஸ்ரார் வி.கவும் மோதியதில் நியூஸ்ரார் வி.க. வெற்றி.

**இரண்டாம் நாள்**

★ பாடசாலை அணி - உருத்திரபுரம் ம.வி. அணியும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியும் மோதியதில் 2:0 என்ற செற் கணக்கில் உருத்திரபுரம் ம.வி. அணி வெற்றி.

★ இராமநாதபுரம் மேற்கு பாடசாலை அணியும் கிளிநொச்சி பாரதி வித்தியாலய அணியும் மோதியதில் 2:1 என்ற செற்கணக்கில் இராமநாதபுரம் மேற்கு பாடசாலை அணி வெற்றி.

★ கழக அணி - மன்னார் அறீரா வி.கவும் தொண்டைமானாறு அண்ணா வி.கவும் மோதியதில் 2:0 என்ற செற் கணக்கில் மன்னார் அறீரா வி.க. வெற்றி.

நேற்றைய உதயனில் இதுதொடர்பாக வெளியான செய்தியில் கரபந்தாட்டம என்பது தவறுதலாக உதைபந்தாட்டம் எனப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (3-305-203)

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

சுன்னாகம் நவீன சந்தைப் பகுதியில் அடிக்கடி சைக்கிள் திருட்டுகள் இடம்பெற்றுவருகின்றன. மக்கள் வங்கியின் சுன்னாகக் கிளை அமைந்துள்ள பகுதியில் இத்திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது வாரம் ஒன்றுக்கு ஆகக்குறைந்தது 2 சைக்கிள்கள் சுன்னாகம் நவீன சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் உட்பட அதனைச் சூழுவுள்ள இடங்களில் திருட்டுப் போகின்றன எனக் கூறப்படுகின்றது. இதனால் தமது தேவைக்காக இப்பகுதிக்கு வரும் பொதுமக்கள் தமது சைக்கிள்களை மிகவும் அவதானத்துடன் நிறுத்திவிட்டுச் செல்கின்றனர். (8-86)

# சாவகச்சேரி நகரப் பகுதிக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படும்

சாவகச்சேரி நகரப் பகுதிக்கு வீதி விளக்குகள் பொருத்த நகரசபை ஏற்படுகளை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான நிதியை சபை நிதியிலிருந்து பெறுவதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரம், சந்தை, கண்டி வீதி, யாழ். வீதி, கச்சாய் வீதி, தனங்களப்பு வீதி, பருத்தித்துறை வீதி, டச்சுவீதி, கந்தையா வீதி, கண்டுவில் ஒழுங்கை, இராமலிங்கம் வீதி, ஆஸ்பத்திரிச் சந்தி உட்பட முக்கிய இடங்களில் 25 வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என்று நகரசபை செயலாளர் திருமதி குணமணி ஆறுமுகம் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு 10 லட்சம் ரூபா செலவில் வீதி விளக்குகள் பொருத்த முன்னர் ஏற்பாடுமேற்கொள்ளப்பட்டபோதிலும் உரிய நிதி கிடைக்காததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. (ஜ-118)


## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090,
077-3086939,
0777-246117,
077-6018467. (44881) (11-16)

தொடர்பு: [illegible]
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு

**EXPRESS RUBER STAMPS & EXPRESS NET CAFE**

மேற்படி நிறுவனத்திற்கு விற்பனை முகவர்கள் தேவையாகவுள்ளதால் தகைமையுடையவர்கள் 14.05.2005 (சனிக்கிழமை) காலை 11 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகந்தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகைமை :- G.C.E (O/L) சித்தி

EXPRESS NET CAFE
328, STANLY ROAD,
(AREYAKULAM JUNCTION) JAFFNA.
T.P.NO : 2227866

(45172) (39-11-16)


## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**கமலலோசனி செல்வரத்தினம்**

(முன்னாள் ஆசிரியை - யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

தோற்றம் 19.12.1942
மறைவு 24.04.2004

எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும்
உங்களது நீங்காத நினைவுகள்
எம்மை நிழலாய் தொடர்கின்றன.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்.

கணவர் - பொ.செல்வரத்தினம்,
மகள் - செ.அபிராமி,
சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள்.

பக்கஸ் லேன்,
மானிப்பாய்.

(45215) (39-11-16)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 25 . 05 . 1969
அரன் அடியில் 12 . 05 . 2001

இணுவிலைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட
**திருமதி வாசுகி ஞானகாந்தன்**

என்றும் நீங்கா நினைவுகளுடன்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
கணவர், பிள்ளைகள் (ஜேர்மனி)
மற்றும் குடும்பத்தினர்.

வங்கியடி,
இணுவில் கிழக்கு. இணுவில்.

தகவல்:
க.வேதநாயகம்

(45185) (39-11-16)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 * 08 * 1959
ஆண்டவன் அடியில் 23 * 04 * 2004

# அமரர் வேலாயுதம் சிறிக்காந்தன்

(ASBESTOS CEMENT COMPANY LTD, ஈவினை, T.O.,
உரிமையாளர், துரை கொமினிக்கேசன்
பொருளாளர், சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகசபை)

அன்பின் உறைவிடமே குடும்பக் குலவிளக்கே
ஆறிரண்டு திங்கள் பறந்து சென்றதுவே
இன்முகம் காணாது கலங்கி நிற்கின்றோம்
குடும்பத் தலைவராய், தந்தையாய், சகோதரராய் இருந்தே
நல் வழிகாட்டி நானிலத்தில் நிலைக்கச் செய்தீர்
நாமிங்கே எல்லோரும் சிறப்புடன் இருந்தாலும்
மனிதருள் மாணிக்கமான உயர் செல்வம் நீங்களெங்கே?
பாரியார், பாலகர்கள் பரிதவிக்க பாதி வாழ்வதனில்
பறித்ததன் மர்மமென்ன காலனவன் உம்முயிரை.
ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறுமா எம் நெஞ்சு அனலாய் கொதிக்கிறது
தங்கள் வழி நின்று காட்டிய நன்னெறியில்
தவறாது நாமிங்கே வாழ்வோம் இது சத்தியம்.
அன்னாரின் ஆத்மா சாந்திபெற வேண்டி
சூராவத்தை முத்துமாரி பொற்பாதம் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துரை வெதுப்பகம்,
துரை பல்பொருள் வாணிபம்
சூராவத்தை, சுன்னாகம்.
T.P. : 0602212762, 222 5278

உங்கள் நினைவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

(45314) (39-22-11-16)


## நூற்றாண்டு நிறைவு 1904 - 2004

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் மாபெரும் கல்விக்கண்காட்சி

பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுடன் இக்கண்காட்சியை அணிசெய் நிறுவனங்களாக
★ யாழ்ப்பாண மின்னகத்தின் LG - அபான்ஸ் காட்சிக் கூடம்
★ அன்னை நாகாபூட் சிற்றியின் நீல்கமால் - பிளாஸ்ரிக் தளபாடக் காட்சிக் கூடம்
★ குறிஞ்சி ஸ்தாபனத்தின் பஜாஜ் - மோட்டார் சைக்கிள் காட்சிக் கூடம்
★ IIS-கணனி நிறுவனத்தின் காட்சிக் கூடம் ★ யாழ். CD-City- இன் காட்சிக்கூடம்

இன்னும் பல காட்சிக் கூடங்கள். இங்கு - சிறப்புத் தள்ளுபடி விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம். சிறுவர்களுக்குப் பெருவிருந்தாக ★ மெரிக்கோ ரவுண்ட் ★ பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் சவாரி

காலம்: 2005 - மே 12 ஆம், 13 ஆம், 14 ஆம் நாள்
இடம்: பாடசாலை வளாகம்

(C-42720)(50-14)

விளம்பர அனுசரணை:
ஜெகா எலக்ரிக்கல்ஸ் - தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.
திருப்பதி - நவீன சந்தை உட்புறம் சாவகச்சேரி.

# கங்கைத் தீர்த்தம் கழுதைக்கு; கும்பிடப்போனவரும் நாகபாம்பும் மோதகத்தின் உள்ளீடு குறித்து அமெரிக்கருக்கு வந்த சந்தேகம்!

## தத்துவங்களை விளக்க பாபா கூறும் கதைகள்

**அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த புட்டபர்த்தி ஸ்ரீ சத்தியசாயி உயர்கல்வி படிப்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அனில்குமார் குடாநாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் நிகழ்த்தியிருந்தார்.**

**தமது சொற்பொழிவுகளின் போது தத்துவக் கருத்துகளைப் பார்வையாளர்களின் மனதில் பதிய வைகக்குமொரு உத்தியாக பல குட்டிக் கதைகளையும் அவர் கூறத் தவறவில்லை. யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற அவரது ஆங்கில சொற்பொழிவின் போது கூறிய குட்டிக்கதைகளின் தொகுப்பு இன்றைய சாயி சிந்தனைப் பகுதியில் இடம்பெறுகின்றது.**

### கும்பிடப் போனவரும் நாகபாம்பும்

இன்று மனிதர்கள் ஆண்டவனை அடையும் நோக்கில் அல்லது அனுக்கிரகத்தைப் பெறறுக கொள்ளும் எதிர்பார்ப்புடன், பகட்டான பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். உண்மையில் அவர்களது மனதில் ஆண்டவன்மேல் பற்றுறுதியோ, தூய விசுவாசமோ, அல்லது அதீத நம்பிக்கைதானும் இருப்பதில்லை.

பக்தரொருவர் பற்றைகளும், புற்றுகளும் சூழ்ந்துள்ள சூழலில்அமைந்திருந்த அச்சிறிய கோயிலுக்கு வழிபடச் சென்றிருந்தார். கோயிலில் அமைந்திருந்த விக்கிரகத்தை நோக்கி "முருகப்பெருமானே! நீ எத்துணை கருணை மிக்கவன். எனக்கும் நீ கருணை காட்டவேண்டும்" எனக்கூறி அந்த முருகப்பெருமானைத் துதித்தார்.

அருகிலிருந்த புற்று ஒன்றிலிருந்து வெளிப்பட்ட நாகபாம்பொன்றைக் கண்டதும் அச்சம் மேலிட அங்கிருந்து தலைதெறிக்க ஓடிவிட்டார்.

**உறுதியற்ற பக்தி**

இந்தளவு தான் அவரது பக்தியின் உறுதி. அவர் மனதளவில் ஆண்டவன் மேல் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆண்டவனைப் புகழ்ந்து முகஸ்துதி செய்வதன் மூலம அனுக்கிரகத்தைப் பெறுதலே அவரது நோக்கமாக இருந்தது அன்றி, மனதில் உண்மையான பக்தி நிறைந்திருக்கவில்லை.

இது ஆண்டவன் தமது அடியவர்கள் மீது மேற்கொள்ளும் ஒரு வித சோதனை எனக் கொள்ளலாம். தம்மீது பூரண நம்பிக்கை வைத்து, எதிர்ப்படும் எத்தகைய சோதனைகளையும் தாங்கிக் கொள்ளும் பக்தர்களுக்கு ஆண்டவனின் அனுக்கர்ரகம் நிச்சயம் கிட்டியே ஆகும் இதனை பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அடிககடி கூறிக் கொள்வார்.

✿✿✿

### கங்கைத் தீர்த்தம் கழுதைக்கு....

'ஏகநாத' என்றொரு தீவிர பக்தர் இருந்தார். அவர் அனைத்து உயிர்களிலும் ஆண்டவனைக் கண்டு அன்புசெலுத்தும் வகையிலான பக்தி மார்க்கத்தில் உயர்ந்த மனப்பக்குவத்தை அடைந்திருந்தார். ஒரு சமயம் இராமேஸ்வரத்தில் கோயில் கொண்டுள்ள ஆண்டவருக்கு அபிஷேகம் செய்யவென தமது சீடர்களுடன் சேர்ந்து நீண்டதூரத்துக்கு அப்பால் இருந்து புனித கங்கையின் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு இராமேஸ்வரம் நோக்கிக் கால்நடையாக யாத்திரை சென்று கொண்டிருந்தார்.

வழியில் ஓரிடத்தில் தாகத்தால் தவித்துக் கொணடிருந்த கழுதையொன்றினை அவர் காண நேர்ந்தது. எவரும் எதிர்பாராத விதத்தில் தாம் எடுத்துக்கொண்டு சென்ற புனித கங்கைத் தீர்த்தத்தை வழங்கி அந்தக் கழுதையின் தாகததைத் தணித்தார். கங்கை நீரின் புனிதம் கெட்டு விட்டதெனக் கருதி அவரது அச்செய்கையை அவரது சீடர்கள் குறைகூறினர். ஆனால், உண்மையில் அவரது செய்கை குறித்து ஆண்டவன் மனமகிழ்வு அடைந்திருப்பார் என்பதில் 'ஏகநாத'த்துக்கு எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை.

**உண்மையான பக்தி எது?**

கடவுளைத் துதிப்பதற்காகவே நாம் கோயிலுக்குச் செல்கிறோம். ஆயினும், உண்மையான பக்தியின்றி எமக்கு ஆண்டவனின் அனுக்கிரகம் கிட்டப் போவதில்லை. அயலானின் தோட்டத்தில் பூப்பறித்துச் சென்று ஆண்டவனுக்குச் சாததுவது உண்மையான பக்தியாகாது. அனைத்து உயிர்கள் மீதும்அன்பு காட்டுவதே உண்மையான பக்தியாகும். இவை பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா தமது பக்தர்களுக்கு அடிக்கடி திருவாய் மலர்ந்தருளும் வாக்கியங்களாகும்.

✿✿✿

### கணவனின் பூதவுடலை வெட்டச் சொன்ன மனைவி

முற்காலத்தில் இந்தியாவில் கட்டப்பட்ட வீடுகளில பெரும்பாலானவற்றில் மிக ஒடுங்கிய கதவுகளைப் பொருத்துவதும் மிகச்சிறிய அளவிலான சாளரங்களை அமைப்பசு"ம் நடைமுறை வழக்கங்களாக இருந்து வந்துள்ளன. இது முற்று முழுதாகப் பாதுகாப்பின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

அத்தகைய ஒரு வேளையில் ஒருநாள், ஒரு வீட்டின் குடும்பத் தலைவர் மரணமடைந்தார். அவரது பூதவுடலைத் தகனம் செய்வதற்காக வீட்டினுள் இருந்து வெளியே எடுத்துவர வேண்டியிருந்தது. அவரோ பென்னம்பெரிய தூல சரீரம படைத்தவராய்க் காணப்பட்டார். வீட்டினுள்ளிருந்து குறுகிய கதவினூடாக அவரது பூதவுடலை வெளியில் எடுத்து வருவது இறந்தவரின் உறவினர்களுக்குப் பெரும் சிரமமாய் அமைந்தது. மாற்றுஏற்பாடாக அவ்வீட்டின்ஒரு பக்கச சுவரை இடித்து விடுச் சடலத்தை வெளியில் எடுத்துவருவதென உறவினர்கள் கூடித் தீர்மானித்தனர்.

இதனைக் கேள்வியுற்ற இறந்தவரது மனைவி அவ்விடத்தே வந்து, "இந்தச் சுவரை இடித்து விட வேண்டாம்: தற்போது எமது கணவரும் இறந்துவிட்டபடியால் நீங்கள் இச்சுவரை உடைத்தால் அதனை எனக்கு மீண்டும் கட்டுவித்து உதவயாருமிலலையே? வேண்டுமானால் உயிரற்ற எனது கணவரின் உடலைப் பாகங்களாக்கி வெளியில் எடுத்துச் செல்லுங்கள் எனக்கூறினார்! ஏன் சிரிக்கிறீர்கள்?..!!...!

**போலியான பற்று**

உண்மையில் அப்பெண் தனது கணவர் மீது வைத்திருந்தது வெறும் பற்று மட்டுமே. தமது கணவரால் தமது வாழ்வுக்குத் தொடர்ந்து பற்றாதாரம் கிட்டப் போவதில்லை என்பதை உணர்ந்த மறுகணமே அவள் தனது கணவன் மேல் வைத்திருந்த பற்று அற்றுப் போய் விடுகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாற்றமுறத்தக்க இத்தகைய பற்று, எதிர்கால யதார்த்த வாழ்வுபற்றிய அப் பெண்மணியின் எதிர்பார்ப்பால் முற்றாக அற்றுப்போய்விடுகிறது.

இப்போலியான பற்றை உண்மையான இதய சுத்தமான அன்பென நம்பி ஏமாந்த அப்பெண்ணின் கணவர் தாம் உயிர்வாழ்ந்த வேளையில ஆன்மீக வழியில் தமது ஆத்ம ஈடேற்றத்துக்கான முயற்சியை மேற்கொண்டிருப்பின் அவருக்கு அத்தகைய ஆத்ம ஈடேற்றம் கிட்டியிருக்கும்.

மனிதர்கள் தாம் உயிர்வாழும் வேளையில் பகவத்கீதை காட்டும் நெறியில் உண்மையான அறிவின் தேடலிலும் மெய்யறிவைக் காணும் முயற்சியிலும் ஈடுபட்டால் அது அவர்களை மெய்ஞ்ஞான நிலைக்கு இட்டுச்செல்லும்.

இதுவும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தமது அருளுரைகளில் சுட்டிக்காட்டியதே ஆகும்.

✿✿✿

### மோதகம் குறித்த அமெரிக்கரின் சந்தேகம்!

ஒருமுறை பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவைத் தரிசிக்க இந்தியாவுக்கு வந்த அமெரிக்கரொருவர் தனது தமிழ் நண்பரொருவருடன் தமிழ் நாட்டுக்குச் செல்லநேர்ந்தது.

அந்தத் தமிழ் நண்பரின் வீட்டுக்குச் சென்ற சமயம அவரது குடும்பத்தினர் அந்த அமெரிக்க நண்பரை ஆர்வத்தோடு வரவேற்று உபசரித்தனர். தாம் விசேடமாகத் தயாரித்திருந்த பட்சண வகையொன்றை அந்த அமெரிக்க நண்பருக்கு பரிமாறினார். உப்புறம் பயறு, சர்க்கரை மற்றும் தேங்காய்த்துருவல் கலந்த கூட்டை வைத்து அரிசிமாவால் வெளிப்புறம் மூடி ஆவியில் அவித்தெடுத்த பட்சணம் அது.

அது தமிழ் நாட்டவரினதும், இலங்கைத் தமிழ் மக்களதும் பாரம்பரியப் பட்சண வகையொன்று. மிகுந்த சுவைகொண்டது அது. அதனை விரும்பி உண்ட அந்த அமெரிக்கரின் மனதில் இருந்தாற்போலிருந்து சந்தேகமொன்று தோன்றியது. தனது மனதில் எழுந்த சந்தேகத்தை வாய்விட்டுக் கேட்டும்விட்டார்.

வெளியில் மாவால் முற்றுமுழுதாக மூடப்பட்ட இப் பட்சணத்தினுள் எவ்வாறு ருசிமிக்க அந்தக் கூட்டுப் பொருளை உங்களால் வைக்க முடிந்தது?

இதைக் கேட்ட ஏனையோர் வாய்விட்டுச் சிரித்து விட்டனர்.

**நம்பிக்கையும் நல்லெண்ணமும்**


இந்தியர்கள் மந்திர வேலைகளில் வல்லவர்கள் என்று எப்போதோ எவரோ அந்த அமெரிக்கருககுக் கூறிவைத்திருக்க வேண்டும். இப்போது இப்பட்சணத்தை உண்டசமயம் அமெரிக்கருக்கு சந்தேகம் மனதில் தோன்றி இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட அந்தப் பட்சணம் வேறு எதுவுமில்லை. தமிழர்களின் பராம்பரிய பட்சண வகைகளில் ஒன்றான மோதகமே அந்தப் பட்சணமாகும்.

விஞ்ஞான தொழில்நுட்பத்துறையில் அதீத முன்னேற்றம் கண்டுவிட்ட அமெரிக்காவின் குடிமகன் ஒருவருக்கு தமிழர்களின் பாரம்பரியப் பட்சணமொன்று ஆச்சரியத்தையும் அத்துடன் கூடிச் சந்தேகத்தையும் ஏற்படுத்திய சமபவத்தை எந்த விதத்தில் கணிப்பிட இயலும்?

தொகுப்பு: பொன்வேளன்

"தயக்கமும் அவநம்பிக்கையும் அமைதியான மனத்துக்கும் குழப்பத்தை ஏற்படுத்துபவை. யதார்த்த வாழ்க்கை முறையிலும் சரி, ஆன்மீகத் தேடலின் போதும் சரி, பரஸ்பர நம்பிக்கையும், நல்லெண்ணமும் கடைபிடிக்கப்படுதல் முக்கியமாகும். எந்தஒரு விஷயத்திலும உறுதியான நம்பிக்கையும், பரந்த நோககும் வாழ்வில் நற்பலனை நல்கியே ஆகும்" என பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தமது அடியார்களுக்கு அடிக்கடி உபதேசித்து வருகிறார். □



# வெங்காயக் குமிழ்கள் மீதான கவனிப்பு வினைத்திறன்மிக்க உற்பத்திக்கு உதவும்

**கமமும் புலமும்**

**குடாநாட்டில் வெங்காய அறுவடை ஆரம்பித்துவிட்டது. அறுவடை முடிந்ததும் வெங்காயத்தை எவ்வாறு பாதுகாத்து வைப்பது என்பது தொடர்பாக விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

அந்த விவசாயிகள் கடும் உழைப்பின் மூலமாக வியர்வை முத்துக்கள் நிலத்தில் சிந்திய நாள்கள்! ஆனால், இன்றோ அவற்றின் பலனை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள். ஆம்.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது வெங்காய அறுவடை மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையில் அவற்றை நீண்டகாலம் எவ்வாறு பழுதடையாமல் களஞ்சியப்படுத்தலாம் என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில், வெங்காயத்தைப் பொறுத்தவரையில் பயிர்ச்செய்கைக் காலத்துடன் ஒப்பிடும் பொழுது அறுவடைக்குப் பின்னான களஞ்சியப்படுத்தல் காலத்திலேயே அதிகளவிலான இழப்புகள் ஏற்படுகின்றன.

ஒருவகையில் பார்க்கும்போது விவசாயிகளினால் பயிர்ச்செய்கைக் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கவனிப்பு முறைமைகளிலும் பார்க்க அறுவடையான வெங்காயக் குமிழ்கள் மீது எடுக்கப்படுகின்ற கவனிப்பு முறைகள் குறைவாகக் காணப்படுகின்றன. ஏனெனில், விவசாயிகள் வேறு பயிரைப் பயிரிடும் ஆவலில் இதன்மீதான கவனக்குறைவும் ஒரு காரணமாக இருக்கலாம். இதனால், விவசாயிகள் தமது வெங்காய உற்பத்திக்குரிய முழுப்பலனையும் அனுபவிக்க முடிவதில்லை.

எனவே, வெங்காயக் குமிழ்களின் தகுந்த பாதுகாப்பான களஞ்சியப்படுத்தலுக்காக அறுவடையின் போதான காலப்பகுதியிலும், அறுவடைக்குப் பின்னான காலப்பகுதியிலும் தகுந்த கவனம் எடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன மூலம் வெங்காயக் குமிழ்களை நீண்டகாலம் பாதுகாத்து பற்றாக்குறை நிலவும் காலங்களிலும் கூட அவற்றை விற்பனைசெய்து அதிகளவு இலாபத்தைப் பெறக்கூடியதாயிருக்கும்.

வெங்காயத்தைப் பொறுத்தவரை 40-50% இழப்பு அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியிலேயே ஏற்படுகின்றது.

எவ்வகையான இழப்புகள் ஏற்படுகின்றன?

i. அழுகல்
ii. முளைத்தல்
iii. மீளவேர் உருவாதல்
iv. மேற்பரப்புகளில் சுருக்கம் ஏற்படுதல்.

இத்தகையவற்றினால், நுகர்வோர் நாட்டம் குறைவடைகிறது. இதனால், சந்தைப்படுத்தல் குறைவடைய நஷ்டம் விவசாயிகளை நோக்கி நகருகின்றது.

களஞ்சியப்படுத்தலின்போது இழப்புகளை ஏற்படுத்துகின்ற முக்கிய காரணிகளாக...

i. வெப்பநிலை
ii. காற்றோட்டம்
iii. ஈரப்பதன்
iv. நுண்ணங்கிகள் என்பன இருக்கின்றன.

களஞ்சியப்படுத்தலின்போது ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கு,

i. உற்பத்தியின் போது / பயிர்ச்செய்கைக் காலத்தின்போது கைக்கொள்ளப்படுகின்ற கலாசாரக் கட்டுப்பாட்டு முறைமைகள்.

ii. பொருத்தமானதும் சரியானதுமான நேரத்தில் அறுவடை செய்தல்

iii. களஞ்சியப்படுத்தலின்போது வழங்கப்படும் நிலைமைகள்.

iv. கையாளுகை முறைகள்...

✳ வெங்காய உற்பத்தியின்போது நீரிழப்புத்தன்மை குறைவானதும் நுண்ணங்கிகளுக்கு எதிர்ப்புத் தன்மையான தோலுள்ள வெங்காய இனங்களைப் பயன்படுத்துதல்.

✳ பயிர்ச்செய்கையின் இறுதிக்காலங்களில் உயர் நைதரசன் செறிவுகொண்ட பசளைகளைப் பயன்படுத்துவதனால், களஞ்சியப்படுத்தலின் போது முளைத்தல் தூண்டப்படும். அத்துடன், பக்ரீரியாக்களினதும் பங்கசுக்களினதும் தாக்கம் ஒப்பீட்டளவில் கூடுதலாகக் காணப்படும்.

✳ பயிர்ச்செய்கைக் காலத்தின்போது கைக்கொள்ளப்படுகின்ற திட்டமற்ற நீர்ப்பாசன முறைமை.

✳ சரியாக முதிர்ச்சியடையாத குமிழ்களை அறுவடைசெய்தல் இதனால், குமிழ்களின் கழுத்துப் பகுதியினூடாகத் தொற்றுக்கள் ஏற்படக் கூடியதாயிருக்கும் காலம் பிந்திய அறுவடையின் காரணமாக வெங்காய்க் குமிழ்களின் தோலின் தரம் குறைவடையும் மீள்முளைத்தல், வேர் உருவாதல் என்பனவற்றுடன் குமிழ்களின் வன்மைத் தன்மையும் குறைவடையும்.

✳ தரம்பிரித்தெடுத்தல் - அழுகிய நோய்த் தாக்கமுள்ள குமிழ்களை அகற்றுதல் - இவ்வாறு இவற்றை அகற்றாமல் விடுவதனால் ஏனைய தரமான குமிழ்களும் பாதிப்படையும்.

✳ கையாளுகையும் பராமரிப்பும்

அறுவடையின் போதும் இடம்மாற்றலுக்காக ஏற்றி இறக்கலின் போதும் கவனமாகக் கையாளுதவதன்மூலம் குமிழ்களுக்கு ஏற்படும் சேதம் குறைக்கப்படும். இதனால், களஞ்சியப்படுத்தலின்போது இழப்புகள் குறைவானதாகக் காணப்படும்.

✳ பொதுவான சேமிப்பு முறைகள்...

பெரும்பாலான நாடுகளில் தொழில்நுட்ப முன்னேற்றமான உபகரணங்களைக் கொண்டு நீண்டகாலத்திற்கு வெங்காயக் குமிழ்களைப் பழுதடையாமல் பாதுகாக்கின்றார்கள். ஆனால், யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் விவசாயிகள் தமது பொருளாதார ரீதியைக் கருத்திற்கொண்டு சாதாரணமான பாரம்பரிய முறைகளையே கைக்கொள்கிறார்கள்.

காந்தன், விவசாயபீடம்

பொதுவாக, வெங்காயக் குமிழ்களானது குலைகளாக்கப்பட்டு நன்றாகக் காற்றோட்டம் உள்ள நிழலான இடத்தில் அவற்றைக் கட்டித் தொங்கவிடுதல் (கூரைகள், தட்டுகள்) இதன் போது இவற்றை நெருக்கமாகக் கட்டித் தொங்கவிடாமல் குறிப்பிட்டளவு இடைவெளியில் கட்டித தொங்கவிடுதல் சாலச்சிறந்ததாகும். இதனால், வெங்காயக் குமிழ்களைச் சிலகாலம் பழுதாகமல் களஞ்சியப்படுத்தலாம். இது மலிவானதும் இலகுவானதுமான முறையாக இருக்கின்றது.

மறறும், வலையமைப்பிலான பைகள், பெட்டிகள், தட்டுகள் என்பனவற்றிலும் வெங்காயக் குமிழ்களை இட்டுச் சேமித்துப் பாதுகாக்கலாம். இதன்போது முக்கியமாக வளியோட்டம் இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

எனவே, தகுந்த முறைகளினூடாக வெங்காயக் குமிழ்களைப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்திப் பயன்பெறுவோமாக! *





# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண அரசாங்க அதிபர்/மாவட்ட செயலரினால் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | வேலை விவரம் | ஆகக்குறைந்த தரம் (ICTAD) | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|---|
| 01 | வலயக் கல்வி அலுவலகம் நிர்மாணித்தல் - வலிகாமம் வலயம் | M5 | 100,000.00 | 750.00 |
| 02 | அராலி சரஸ்வதி வித்தியாலயம் இரு மாடிக்கட்டடம் நிர்மாணித்தல் | M6 | 50,000.00 | 750.00 |
| 03 | மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்மாணித்தல் | M5 | 100,000.00 | 750.00 |
| 04 | ஆண்கள் விடுதி அமைத்தல் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மருதங்கேணி. | M8 | 17,000.00 | 750.00 |
| 05 | பெண்கள் விடுதி அமைத்தல் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மருதங்கேணி. | M8 | 17,000.00 | 750.00 |
| 06 | கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை இரு மாடிக்கட்டடம் நிர்மாணித்தல் | M8 | 18,000.00 | 750.00 |

2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட இலங்கைக் கட்டட ஒப்பந்தகாரர் சங்க அங்கத்தவர்களாகவும் கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளைத் திட்டப் பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் குறிப்பிட்ட ஒவ்வொரு வேலைக்குமான மீளளிப்புச் செய்யமுடியாத தொகையினையும் செலுத்தி 25.05.2005ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்
6. கேள்வி ஆவணங்களைத் திட்டப்பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாள்களிலும் அலுவலக நேரங்களில் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. கேள்விகள் இணைப்பிரதிகளில் அரக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒருவர் ஆறு வேலைகளுக்கும் கேள்விகள் சமர்ப்பிக்கலாம். ஒவ்வொரு வேலைக்கும் கேள்விகள் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கபடல் வேண்டும்.
8. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, யாழ். மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 27.05.2005ஆம திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பாகக் கிடைக்ககூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது திட்டப்பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் 27.05.2005 திகதி பிற்பகல் 3.00 மணிக்குத் திறக்கப்படும். அச் சமயம கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

க.கணேஸ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
தலைவர்,
மாவட்டக் கேள்விச் சபை,
யாழ்ப்பாணம்.

*மாவட்டக் கேள்விச் சபை,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
10.05.2005 (சி-42772)(21-15-45)

## விசேட பூசைகள்

சமாதானம் அமைதி நிலவவேண்டி தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசைகள், வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

ஆலயத்தின் கொடியேற்றத் தினமான இன்று வியாழக்கிழமை தொடக்கம் தொடர்ந்து இந்த வழிபாடுகள் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமைதி, சமாதானம் வேண்டி சிவஞானச் செல்வர் சி.சி.வரதராசா, மு.சடாட்சரம், டாக்டர் க.லோகேஸ்வரன் ஆகியோர் தலைமையில் உற்சவ தினங்களில் தினமும் விசேட பூசை, கூட்டுப் பிரார்த்தனை என்பன நடைபெறும் என ஆலயப் பரிபாலன சபையின் தலைவர் கிருஷ்ணசாமி ரவிச்சந்திரன் தெரிவித்தார். (எ-119)

## ஆன்மீகத் திருவிழா

யாழ்ப்பாணம்,மே12

வாழும் கலை நிறுவுனர் பரமபூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜியின் 49ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு சர்வதேச வாழும் கலை அற நிறுவனம ஆன்மீகத் திருவிழாவை நடத்தவுள்ளது.

இந்நிகழ்வு நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)

## உளவளத் துணையாளர் சந்திப்பு

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றி வரும் உளவளத் துணையாளர்களுக்கான சந்திப்பும் கலந்துரையாடலும் நாளை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் வலிகாமம் வலயப் பாடசாலைகளில் உளவளத்துணையாளர்களாகக் கடமையாற்றிவரும் சகலரும் கலந்துகொள்ள வேண்டும் என வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா அறிவித்துள்ளார்.(ஜ-152)

## வாழும் கலைப் பயிற்சி

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் சர்வதேச வாழும் கலை அறநிறுவனம் இளைஞர்களுக்கு வாழும் கலைப் பயிற்சியை இலவசமாக வழங்கவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் தொடர்ந்து 7 தினங்களுக்கு நடைபெறவுள்ள இப் பயிற்சியில் 18 வயதுக்கும் 30 வயதுக்கும இடைப்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம்.

பங்குபற்ற விரும்புவோர் யாழ்.நாவலர் மணி மண்டபம், இந்து சமயப்பேரவை ஆகியவற்றில் தமது பதிவுளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(8-202)


# பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள் ளத்தைப் பக்குவப்படுத்தி, எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன் . என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன் ஆமேன் . ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.
ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி. ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.

[மேற்படி செபத்தை நம்பிக்கையுடன் ஜெபித்து கேட்ட வரம் [பரீட்சையில் சித்தி] கிடைத்தமைக்கு நன்றியாக]

(4523ஐ)(46-21-45-15) -ஓர் அடியாள்.

# தபால் மூலம்

மார்க்கோனி நிறுவனம் இலத்திரனியல் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். எமது விளம்பரங்களை இலங்கையின் பிரபல தமிழ், சிங்கள, ஆங்கில முன்னோடிப் பத்திரிகைகளிலும் காணலாம். தபால் மூலம் குறைந்த கட்டணத்தில் இலத்திரனியல் மற்றும் செலுலார் பயிற்சி நெறிகளை கற்க விரும்புபவர்கள் கட்டணங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வங்கிக் கணக்குகளிற்கோ அல்லது தபாற்கந்தோரில் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பலாம். அல்லது கற்கை நெறி பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள மேலதிக ரூ5 முத்திரை ஒட்டிய நீள கடித உறையை வைத்து எமது முகவரிக்கு அனுப்பலாம். (மேலதிக முத்திரை நீள கடித உறை அவசியம்) கற்கை முடிவில் சான்றிதழைப் பெறலாம். இந்தத் திட்டத்தில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் அனைவரும் இணைந்து கொள்ளலாம். இலங்கையில் இருக்கும் அனைவரையும் இதில் இணைந்து பயன் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண முடிவுத் திகதி :- 31 - 05 - 2005



## 1.Dip in Advanced Electronics (Repairing)

Full Basic Electronics, Basic Engineering Science,Handling of Digital Meters,Transistor & IC Circut Designing, Making lot of interesting usefull circuits, Wireless Remote Controling & Transmitting(full), Radio Technology(full), TV Technology(full), Computer Monitors & UPS, VCD,DVD. 5 - 6 moth Course, முழுக்கட்டணம் - ரூ 2500/=
பகுதிகளாக அனுப்ப விரும்புகிறவர்கள் முதலில் 1000 பின்னர் 1000,500.

## 2.Dip in Cellular Technology (Repairing)

(1)Cellular Batteries & Maintenance. (2) GSM Phone's & SIM's Security setup & Codes. (3) Analog & Digital, AF & RF, Networks (Basic) (4)Cellular maintenance tips for users & Technicians (5)User Interface Softwares (Ring Tones,Pictures, Phone Book,SMS) (6)Professional Cellular Service Softwares (7)Type of Cellular Service Cables, G.S.M Service Codes, International GSM codes, Circuits & Service Diagrams, Professional Cellular tools (8) Introduction of computer Hardwares. (9)Mobile Phone Repairing. 3 month Course, முழுக்கட்டணம் - ரூ1400/= (பகுதிக்கட்டணமாயின் 1000 பின்னர் 400)

## 3.Cer in Home Electronics & Cellulars (பெண், ஆண்)

பாவனையாளர்களுக்கான கற்கைநெறி. இதில் அன்றாட வாழ்வில் தேவைப்படும் மின்னியல், இலத்திரனியல், செலுலார் தொடர்பான பகுதிகள் உள்ளடக்கப்படும். அடிப்படை இலத்திரனியலும் மின்னியலும், மற்றும் இலத்திரனியல், மின்னியல் சாதனங்களின் அடிப்படைக் கட்டமைப்பு, சாதனங்களில் அவதானிக்க வேண்டிய முக்கிய விடயங்கள், செலுலாரில் பாவனையாளருக்குத் தேவையான அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்படும். இதனை வீட்டில் உள்ள அனைவரும் பயிலலாம். தகைமை எதுவும் அவசியமில்லை. முழுக்கட்டணம் - ரூ 600/=

## 4.Cer in Electronics for Kids (சிறுவர்களுக்கு)




10-15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கானது. இதில் Basic Electronics, Transistor & IC Circuit Designing, Digital Meters, Introduction of Radio Technology. Practicals - LED Light Circuits, Sound Switch, Bird or Animal sound Circuits and FM mic Circuits and Simple Radio Circuit. பரிசோதனைகள், செய்முறைகளுக்குரிய வீடியோ செய்யப்பட்ட VCD க்களும் மேலதிகமாக அனுப்பப்படும். முழுக்கட்டணம் - ரூ 600/=

செலுலார் திருத்துபவர்கள் இலத்திரனியல் கற்க வேண்டுமாயின் முழுக்கட்டணமாக ரூ 3900/= (2500+1400) அல்லது பகுதியாக ரூ 2000/= ( 1000+1000) அனுப்பலாம்.

வங்கி மூலம் அனுப்புவதாயின் : HNB Bank - 0090651986, Bank of Ceylon - 1070119, Commercial Bank - 8100025135. பின்வரும் தகவல்கள் மூன்று வங்கிகளுக்கும் பொதுவானவை Name - Marconi Technical Institute, Branch - Wellawatta, Address - 410, 2nd floor,Galle Road,Wellawatte, Account Type - Saving Account) அல்லது மணிஓடர் பத்திரமாயின் :- பணம் கொடுபடவேண்டிய இடம் - Wellawatta Post Office, பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute. Bank ல் அல்லது Post office ல் பெற்ற பற்றுச் சீட்டையும், தெளிவாக எழுதப்பட்ட உங்கள் முகவரியையும் பதிவுத் தபாலில் உடன் அனுப்பவும். (வங்கியினூடாக அனுப்பும் போது கொமிசன் வழங்கத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது)

## www.marconiinstitute.com

செலுலார் மாணவர்களுக்கு பழுதுபார்க்கும் தொழில்சார் மென்பொருள் தொகுதி ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.

அனைத்து பாடத்திட்டங்களுக்கும் மேலதிகமாக வீடியோ செய்யப்பட்ட வெவ்வேறு VCD க்களும் அனுப்பப்படும். இதன் மூலம் மாணவர்கள் நேரடியாக வகுப்பில் பயிற்சியில் ஈடுபடுவதைப் போன்ற அனுபவத்தைப் பெறமுடியும். இதில் இலத்திரனியல் அடிப்படை உபகரணங்கள், கருவிகள், சேக்கிற் தயாரித்தல், பரிசோதனைகள், செலுலார் மென்பொருள் கணனிப் பகுதிகள், பழுதுபார்த்தல் என்பனவும் அடங்கும்.

**MARCONI TECHNICAL INSTITUTE**
410, 2nd floor, Galle Road, Wellawatta.TP: 2361362

உ

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்
**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்**
**வருடாந்த மகோற்சவம் - 2005**

கொடியேற்றம்: 13.05.2005 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி
தேர்த்திருவிழா: 22.05.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி
தீர்த்தத்திருவிழா: 23.05.2005 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி
தினமும் இரவு 8.00 - 9.00 மணிக்கு தெய்வீகப் பேருரை.
கந்தன் கருணை பொருள் பற்றி உரையாற்றுபவர் சிவனருட் செல்வர் இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்)

ஆலய பரிபாலனசபை .

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (45232)(21-45-15)

உ

**சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய**
**தர்மகர்த்தா சபையின்**
**விசேட அறிவித்தல்**

22.05.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவின்போது கோயில் வளாகத்தில் வந்து விற்பனை செய்யும் சகல ஐஸ்கிறீம் வாகனங்களும் முன் அனுமதி பெறவேண்டும். கோயில் தர்மகர்த்தா சபையினருடன் தொடர்பு கொண்டு முன்அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும். அனுமதி பெறாதவர்கள் கோயில் வீதிக்கு வர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

*ஆலய தர்மகர்த்தா சபையினர்.*

பறாளை,
சுழிபுரம். (சி/42773)(21-45-15-32)

# ‘டெங்கு’ காய்ச்சலை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கு உள்ளூர் அமைப்புகளின் முழு ஒத்துழைப்புத் தேவை

## வலியுறுத்துகிறார் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே12

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது. இதனை முற்றாக இல்லாது ஒழிக்க உள்ளூர் சமூக அமைப்புகளும், உள்ளூராட்சி சபைகளும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

- இவ்வாறு மாகாண சுகாதாரச் சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர். ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

டெங்கு கட்டுப்பாடு தொடர்பான ஆய்வுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ்.செயலக கேட்போர்கூடத்தில் யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் இடம்பெற்றது. இதில டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தொடர்ந்து கூறுகையில்-

உள்ளூராட்சியுடன் இணைந்த வகையில் சுகாதார வைத்திய அதிகாரிகள் தமது எல்லைப் பிரதேசத்திற்குள் உள்ள ஒவ்வொரு வீட்டின் சுத்தம் குறித்தும் ஆய்வுசெய்ய வேண்டும்.

இதன்பின்னர் டெங்கு நோய் அறிகுறி இல்லாத வீடுகளுக்கு டெங்கு அறிகுறி இல்லாத சான்றிதழ் வழங்கப்படும்.

இத்திட்டத்தினை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளோம்.




டெங்கு நோய் அறிகுறி உள்ள வீடுகளின் சுத்தம் பேணும்முறை குறித்து ஆலோசனை முதலில் வழங்கப்படும். அதனையும் மீறிச் செயற படும் வீட்டு உரிமையாளர்களுக்கு அவ்விடத்திலேயே தண்டப்பணம் அறவிடப்படும் முறை செயற்படுத்தப்படும் - என்றார்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கூறுகையில்:-

மிகவும் கஷ்டப்பட்ட ஏழை வியாபாரியின் ‘சாப்பத்தை’ கைப்பற்றி அதனை அழிப்பதன் ஊடாக நோய்களைக் கட்டுப்படுத்த முடியாது.



ஏழையான ஒருவன் தனது வாழ்வாதாரத்தை இந்த சிறுவியாபாரம் ஊடாகவே கொண்டு நடத்துகிறான்.

எனவே, யாழ்.நகரப் பகுதியிலும் இதரப் பகுதிகளிலும் சுகாதாரச் சீர்கேடாக விற்பனை செய்கின்றவர்களுக்குச் சுகாதார விதிமுறைகளை எடுத்துக்கூறி ஆலோசனை வழங்குங்கள் - என்றார்.

மேற்படி நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் என்.சிவராசா, முன்னாள் சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர்.க.தா.சிவபாதம் ஆகியோர் உரையாற்றினர்.

மேற்படி ஆய்வுக் கூட்டத்திற்கு உள்ளூராட்சி சபை செயலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-185)

# வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவும் விவசாய வங்கிகள்

## கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர்

விவசாயவங்கி மூலம் பின்தங்கிய நிலையிலும், வறுமையிலும் உள்ள விவசாயிகள் கடன்களைப்பெற்று அதன்மூலம் தமது விவசாயத் தொழிலினை மேம்படுத்த முடியும். இதற்காகவே கிராமங்கள் தோறும் விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக விவசாய வங்கிகள் திறந்து வைக்கப்படுகின்றன.

- இவ்வாறு யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்தார். புலோலி கமநல சேவைகள் நிலையத்தின் விவசாயிகள் வங்கி திறந்துவைக்கப்படும் நிகழ்வு, கடந்த வெள்ளிக்கிழமை பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட சுந்தரேசன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

கடந்த கால அனர்த்தங்களால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். மற்றைய மாவட்டங்களைப் போல இம்மாவட்டத்தில் சாதாரண நிலை உருவாகவில்லை. எனவே, விவசாயிகள் இந்த வங்கி மூலம் பயன்களைப் பெற முடியும். புலோலியில் திறக்கப்பட்டது மூன்றாவது விவசாய வங்கியாகும் யாழ் மாவட்டத்தில் சாவகச்சேரி மற்றும் சுன்னாகத்திலும் விவசாய வங்கிகள் இயங்கி வருகின்றன.



விவசாய வங்கி மூலம் விவசாயிகள் சேமிப் புப் பழக்கத்தை முன்னெடுத்துச்செல்ல முடியும். விவசாயத் தொழிலை மேம்படுத்த விவசாய வங்கி உன்னதசேவையைச் செய்ய முடியும் - என்று குறிப்பிட்டார்.

இவ்விவசாய வங்கித் திறப்பு நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார், யாழ்மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கே.சங்கர் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-36-204)

## இடம்பெயர்ந்த மக்களின் துயரம் தீர்வதற்கு

# உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு எப்படியும் தீர்வுகாணப்படவேண்டும்

மண்டைதீவு,மே12

இலங்கையின் வடபுலத்திலும் ஏனைய பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் என்று கூறப்படும் இராணுவ முகாம்களுடன் பின்னிப்பிணைந்து உள்ளன. இந்தப் பாதுகாப்பு வலயங்களுக்கு எப்படியாவது தீர்வு காணவேண்டும். இல்லையெனில், இடம்பெயர்ந்த மக்களின் துன்ப, துயரங்களுக்குத் தீர்வுகாண இயலாது.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சித் தலைவருமான அ.விநாயகமூர்த்தி.

தமிழ்க் காங்கிரசுக் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆனையிறவை இழந்தபின் இலங்கை அரசு மேற்கொண்ட ‘அக்கினிச் சுவாலை’ படை எடுப்பும் படுதோல்வியில் முடிந்தது. இதைத் தொடர்ந்தே போர்நிறுத்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் அடிநாதமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் பொதுமக்களின் இயல்பு வாழ்வாகும்.

மூன்று வருட போர்நிறுத்தத்தின் பின்பும் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. அண்மையில் பிரித்தானிய அரசின் பெண் பிரதிநிதி வடபுல அகதிமுகாம்களுக்கு வந்தார். அவர் உங்களுக்கு என்னவேண்டும் என்று கேட்டபொழுது “எங்களது சொந்த இடங்களுக்கு நாங்கள் திரும்ப வேண்டுமென்ற” பதிலே கிடைத்தது.

படைகள் இருக்கும்வரை பாதுகாப்பு வலயம் இருக்கும். அது வரைக்கும் வலிகாமம் வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலேயே இருக்கவேண்டும். தமிழர் தாயகத்தில் 86 வீத நிலம் புலிகளிடம் இருக்கிறது. வலிகாமம் கிழக்கில் 30 வீத நிலம் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளது.



வலி.வடக்கில் 32 கிராம அலுவலர் பிரிவுகள் பாதுகாப்பு வலயத்திலேயே உள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு தயாராக இல்லை. தமிழர் தரப்பு மாற்றுவழி முறையைத் தான் கையாளவேண்டும்.

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வெளிநாட்டு அழுத்தம் உள்ளதால் அதைச் செய்யப்போவதாக ஜே.வி.பியின் நிலைப்பாட்டுக்கு மாறாக ஜனாதிபதி கருத்துத் தெரிவித்து வருகிறார்.

கண்டியில் நடைபெற உள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்பாக பொதுக கட்டமைப்பு சாத்தியமாகுமா? - என்று கூறினார் அவர். (ப-88)

# மூத்தோரைப் பின்பற்றாமையாலேயே இளையோர் வழிதவறிப்போகிறார்கள்

தொல்புரம்,மே12

மூத்தோர் வாழ்ந்த நெறிமுறைகளைப் பின்பற்றாது தான்தோன்றித் தனமாகச் செயற்படுவதால் தான் இன்றைய இளஞ்சமுதாயம் வழிதவறிப் போய்க கொண்டிருக்கிறது - என்று கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.



தொல்புரம் தமிழ்ப் பொழில் நடத்திய ஆத்திசூடி மனனப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது புதுவை இரத்தினதுரை மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறான அறநூல் மனனப்போட்டிகள் நடத்துவதன் மூலம் மாணவர்களை நல்வழிப்படுத்த முடியும்.

இன்று மாணவர்கள் சின்னத்திரைத் தொடர்களைப் பார்த்து கல்வியில் உள்ள அக்கறையைக் குறைத்துள்ளனர்.

இதனால், எமது மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொலைக்காட்சி பார்ப்பதைத் தடுத்து ஆத்திசூடி, தேவாரம், திருவாசகம் போன்றவற்றை மனனம் செய்யவைக்க வேண்டும். இதன்மூலம் அருகிவரும் திருமுறைப் பாராயணம், புராணபடனம் என்பனற்றை இளையவர்கள் அறிந்து கடைப்பிடிக்க வழி செய்யமுடியும்.

பெற்றோர்கள் ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கு முன்வர வேண்டும். இன்றைய இளைஞர்கள்தான் நாளைய தலைவர்கள். மேலை நாடுகளிலெல்லாம் தமதுபிள்ளைகளை வளர்ப்பதற்கு ஓர் ஒழுங்குமுறைகளைக் கையாளுகிறார்கள். இதனை நாமும் கடைப்பிடிக்கவேண்டும்.

லட்சக்கணக்கில் பணத்தினைச் செலவழித்து ஆடம்பர விழாக்களை நடத்துவதால், நல்ல கருத்துகள் மக்களைச் சென்றடைவதில்லை. பெரும் எடுப்பில் பணச்செலவில் செயயும் ஆடம்பரங்களை விடுத்து இத்தகைய மனனப் போட்டிகளை நடத்த வேண்டும். இதன் மூலம்தான் மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டல் கிடைக்கும்.

இதற்குப் பெற்றோர்கள் உதவி செய்ய வேண்டும். ஏனெனில், பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றவர்களின் கைகளில்தான் உள்ளது -என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தனது உரையில் -

தற்போது நாட்டில் ஆங்கில மொழி ஆரம்பப் பாடசாலைகள் திறப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நல்வழிப்போதனைகள் எல்லாம் மறைந்துவிடும்.

தமிழ் மொழி ஆங்கிலக் கலப்புடன் பேசப்படும் காலம் இது. இந்நிலையில் ஆங்கில மொழி ஆரம்பப் பாடசாலைகளினால் எதிர்கால இளஞ சந்ததியினர் தமிழை முற்றாக மறக்கின்ற சூழ்நிலை ஏற்படப்போகின்றது.

தமிழை அழகுபடுத்தி வாழவைக்க வேண்டும் என்ற நன்னோக்கோடு இக்கழகம் செயற்படுவது பாராட்டுக்குரியது - என்றார். (ப-119-29-204)

# பயிற்சி வழங்க நிறுவனங்கள் முன்வந்தாலும் பெற்றுக்கொள்ள பெண்கள் தயங்குகிறார்கள்

## கவலைப்படுகின்றார் பத்மினி எம்.பி.

பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்க பல நிறுவனங்கள் முன்வந்தபோதும் அவற்றைப் பெற்றுக்கொளவதில் எம் பெண்கள் பின்னற்கிறார்கள் இது வேதனை தரும் விடயம்.



- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் சங்கானை சிலம்புப்புளியடி இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இளைஞர் மன்றத் தலைவர் எஸ்.அரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் மேலும் பேசும்போது கூறியதாவது:-

இளைஞர், யுவதிகளைப் பொது வேலைகளில் ஈடுபடுத்துவது என்பது தற்போது பெரும் சிரமமாக உள்ளது. அதிகரித்துவரும் சினிமா, சின்னத்திரை சீரியல்களில் தம்மை ஐக்கியப் படுத்திக் கொள்வதுதான் இதற்குக் காரணம்.

இதனால், எம் இளைய சமுதாயம் சீர்கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது.

இன்று பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்க பல்வேறு நிறுவனங்கள் முன்வந்துள்ளபோதும் அவற்றைப் பெற்றுக் கொள்ள எவரும் முன்வருகிறார்கள் இல்லை.

எமது இளஞ்சந்ததியினைத் திட்டமிட்ட முறையில் கலாசார சீரழிவுக்குட்படுத்துகின்றனர். ஆபாசப்படங்கள், மதுபோதைகள் இன்று எம் இளஞ்சந்ததியை வழிமாறச் செய்துகொண்டிருக்கின்றன.

அண்மையில்கூட ஊடகவியலாளர் சிவராம படுகொலை செய்யப்பட்டார். தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையைக் குழப்புவதற்கான சதி திரைமறைவிலே அரங்கேறியுள்ளது. பேச்சு, எழுத்துச் சுதந்திரத்திற்குச் சாவுமணி அடித்துவிட்டதாக இதனைச்செய்தவர்கள் நினைக்கலாம். அந்த நினைப்புகளைத் தூக்கியெறிவதற்குத்தான் எங்களுக்கான அதிகாரம், சுயநிர்ணய உரிமையுள்ள ஆட்சியை நாம் கேட்கிறோம் - என்றார். (ப-29-204)

# வெற்றிடங்கள் - ஆசிரியர் பீடம்

உதயன் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அந்தந்தப் பதவிகளுக்குப் பொருத்தமான தகுதி உடையோரின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எல்லாத் தரங்களுக்குமான தெரிவு - எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை ஆகிய இரண்டினதும் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே அமையும்.

## உதவி ஆசிரியர்கள்

நாளேடு ஒன்றில் ஆகக் குறைந்தது நான்கு வருடங்கள் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம் தேவை.

வயதெல்லை: 25 முதல் 30 வரை

## அலுவலகச் செய்தியாளர்கள்

நாளேடு ஒன்றில் குறைந்தது மூன்று வருடங்களேனும் அலுவலகச் செய்தியாளராகப் பணியாற்றிய அனுபவம் அவசியம்.

வயதெல்லை: 22 முதல் 30 வரை

## இடைநிலை அலுவலர்கள்

நாளேடு ஒன்றின் செய்திப் பிரிவில் எட்டு வருடங்களேனும் இடைநிலை அலுவலராகப் பணியாற்றி இருக்கவேண்டும். செய்திக் கூடப் பணிகளை பொறுப்பேற்றும் பணிசெய்யக்கூடிய தகுதியும் ஆளுமையும் எதிர்பார்க்கப்படுகிறது.

வயதெல்லை: 28 முதல் 35 வரை

அதிக வருட அனுபவம் உள்ளவர்களை வயதெல்லை கட்டுப்படுத்தாது.

மேற்கண்ட பதவிகளுக்குத் தகுதிகாட்டும் ஊடகத்துறை சார்ந்த கல்வித்தகைமை உடையவர்களும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் ஒரு வருட கால உள்ளகப் பயிற்சியின் பின்னர் திறமையின் அடிப்படையில் உதயன் ஆசிரியர் பீடத்திற்கு உள்வாங்கப்படுவர்.

முழுமையான சுயவிவரங்களுடன் உறவினர் அல்லாத இரண்டு பேரிடமிருந்து அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்கள், முந்திய சேவை அனுபவத்தைத் தெரிவிக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் 25-05-2005 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பவும்.

## உதயன் மனிதவள சேவை

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(24-14-34)

# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலஎண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

# வாங்குங்கள் DSI மோட்டார் சைக்கிள் ரயர்கள்.

# வெல்லுங்கள்



விரையுங்கள்!

2005 ஜூன் 31வரை நீடிக்கப்பட்டுள்ளது நீங்கள் கூட அதிஷ்ட வெற்றியாளராகலாம்

**10** புதிய ரக **SUZUKI EN 125** மோட்டார் சைக்கிள்கள்,



**50 DSI Bicycles**

**100 ஒட்டுநர் ஜாக்கெட்டுகள்.**

நீங்கள் ஒரு DSI மோட்டார் சைக்கிள் டயரினை வாங்கும்போது அதனது உத்தரவாத அட்டையின் கிழிக்கப்பட்ட பகுதியினை கீழ்வரும் முகவரிக்கு தபாலில் இடுவதன் மூலம் இப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெறுவீர்கள்

C/74/2004

உங்கள் வியாபாரியிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


அகன்ற பல, வகை, தரம்மிக்க மோட்டார் சைக்கிள் ரயர்களிலிருந்து தெரிவு செய்யுங்கள்.



**சாம்சன் றபர் இண்டஸ்ரீஸ் (பிரைவேட்) லிமிற்றெட்**
ஜினசேன மாவத்தை, மகர, கடவத்தை
Tel: (011)2 926065, (011)4 816442
Fax: (011)2 925064, (011)4 816440
E-mail: dsityre@dsityer.lk
**www.dsityre.com**

CREATIVE SERVICES

# நவம் அறிவுக்கூட புதிய கட்டடத்தை தேசியத் தலைவர் திறந்து வைத்தார்



கிளிநொச்சி,மே12

லெப்.கேணல் நவம் அறிவுக்கூட புதிய கட்டடத்தைத் தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வன்னியில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். தமிழீழ தேசியத் தலைவர் விழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை ஏற்றி வைத்தார்.

லெப். கேணல் நவத்தின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைத்தார்.

திருவுருவப்படத்திற்கான மலர்மாலையை லெப்.கேணல் நவத்தின் தந்தையார் அணிவித்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் மலர் வணக்கம் செய்த பின்னர் நவம் அறிவுக்கூட பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்து மண்டபத்தையும் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அங்கு நினைவு மரத்தையும் அவர் நடுகை செய்தார். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் தேசியத் தலைவர் புதிய கட்டட கட்டுமாணப் போராளிகளுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்துள்ளார். போராளி ஓவிய ஆசிரியர் நீதன் உருவாக்கிய மரச்செதுக்குச் சிற்பத்தை நவம் அறிவுக்கூட பொறுப்பாளர் கலைக்கோன் தமிழீழத் தேசியத் தலைவரிடம் வழங்கினார். தொடர்ந்து நவம் அறிவுக்கூட போராளிகளால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

(8)






லெப்.கேணல் நவம் அறிவுக்கூட புதிய கட்டடத் திறப்பு விழாவின் ஆரம்பத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்படுவதையும் - தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன், நவம் அறிவுகூட பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்வதையும் மண்டபத்தைத் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

## மட்டக்களப்பில் இராணுவ அராஜகத்தைக் கண்டித்து

# கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று அமைதிப் பேரணி

கிளிநொச்சி,மே12

மட்டக்களப்பு சந்திவெளியில் அமைதி வழியில் மறியலில் ஈடுபட்டோர் மீது அரச படைகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று புதன்கிழமை அமைதிப் பேரணி ஒன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியங்களின் ஏற்பாட்டில் இந்த அமைதிப் பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து முற்பகல் 10 மணியளவில் இந்தப் பேரணி ஆரம்பமாகியது.

ஏ-9 வீதியினூடாக நகர்ந்த இந்தப் பேரணியில், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், வெகுஜன ஒன்றிய உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட 500 பேர் பங்குபற்றினர்.

பேரணி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கிளிநொச்சி அலுவகைத்தை நோக்கிச் சென்றது. அங்கு வைத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி றோஜ ஸ்காலித்திடம் வெகுஜன ஒன்றியச் செயலாளர் ப.பசுபதிப்பிள்ளை மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி றோஜ ஸ்காலித் உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:-

இந்தத் தாக்குதல் சம்பவம் பாரதூரமானது என நான் உணர்கிறேன். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன் இந்தச் சம்பவம் இடம்பெற்றது கண்டனத்துக்குரியதாகும். இந்த மகஜரில் குறிப்பிட்ட விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பின்னர் பேரணி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தை அடைந்தது.

அங்கு மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகத்திடம் வெகுஜன ஒன்றியச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

நேற்றைய அமைதிப் பேரணியினால் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டன. போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டன. வீதிகள் எங்கும் கறுப்புக் கொடிகள், வாழைகள் என்பன கட்டப்பட்டிருந்தன. (8-204-305)

## வட்டக்கச்சியில் வெள்ளியன்று கிளினிக்

கிளிநொச்சி,மே12

வட்டக்கச்சி அரசினர் வைத்தியசாலையில் மாதாந்தம் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் ஒரு மணிக்கு மருதததுவ கிளினிக் நடைபெறவுள்ளது.

அதற்கமைய நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கிளினிக் இடம்பெறும். வட்டக்கச்சிப் பிரதேச நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்திசாலைக்குச் செல்வதற்குப் பதிலாக மேற்படி கிளினிக்கில் சிகிச்சையைப் பெறுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(எ-202)

## குடும்பநல உத்தியோகத்தர்கள் இல்லை

புளியங்குளம்,மே12

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி செயலகம் கடந்த மூன்று மாதகாலமாக குடும்பநல உத்தியோகத்தர்கள் இன்றி இயங்கிவருகிறது.

இந்தச் செயலகத்தில் முன்னர் மூன்று நிரந்தர குடும்பநல உத்தியோகத்தர்களும், ஓர் மீள நியமன குடும்ப நல உத்தியோகத்தரும், கடமையிலிருந்தனர்.

இவர்களுள் இருவர் மட்டக்களப்பிற்கும், ஒருவர் நெடுங்கேணிக்கும் மற்றொருவர் புளியங்குளத்திற்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இதனால், இச்செயலகம் உத்தியோகத்தர்கள் எவருமின்றி இயங்கிவருகிறது.

(8-355-204)

## கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரிப்பு


ஒட்டுசுட்டான்,மே12

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள இவ்வேளையில் கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்காமையால் இக் கட்டாக்காலிக கால்நடைகள் பயிர்களை நாசம் செய்கின்றன.

எனவே, இது தொடர்பாகப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கூடிய கவனம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என அப்பகுதியின் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(8-341-202)




# தற்போது பெய்யும் மழையைப் பயன்படுத்தி சிறுதானியச் செய்கை மேற்கொள்ளலாம்

## உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

பரந்தன்,மே12

தற்போது பெய்துவரும் மழையைப் பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுதானியச செய்கையை மேற்கொள்ளலாம் என்று விவசாயத்திணைக்கள கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெல் அறுவடைமுடிந்த பின்னர் அந்த நில ஈரத்தில் சிறுதானியங்களான கௌபி, பயறு, குரக்கன் போன்றவற்றைப் பயிர் செய்வது வழமை.

ஆனால், இம்முறை நெல் அறுவடை முடிந்தகையோடு மழை பெய்துவருகிறது. எனவே, தண்ணீர் வடியக் கூடிய வடிகால் உள்ள நிலத்தில் சிறதானிய உற்பத்தியாளர்கள் பயிரிட்டால அதிக வருமானம் கிடைக்கும்.

அத்துடன், எமது மக்களுக்குத் தேவையான புரதச்சத்து உணவுகளை நாம் வெளியிடங்களில் இருந்து பெறத் தேவையில்லை.

எனவே, எமது மாவட்டத்தில் சிறுதானியங்கள் உற்பத்தி செய்யக்கூடிய மண்ணில் செய்கை மேற்கொள்ள வேண்டியதுஅவசியம் - என்றார்.

(8-352-203)

## சந்தை ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை

புளியங்குளம்,மே12

வவுனியா வடக்கு விவசாயிகள் தமது விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதற்காக சந்தையொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயிர்ச்செய்கை அதிகளவில் இடம்பெறும் இப்பிரதேசத்தில் சந்தை ஒன்று இல்லாமையால் விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதோடு பொருளாதார ரீதியாகவும் பாதிப்படைகின்றனர்.

எனவே தமக்கென ஏ-9 வீதியின் அருகே சந்தையொன்றை அமைத்துத் தருமாறு அப்பிரதேச விவசாயிகள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

(8-355-202)

# சிலப்பதிகாரப் பெருவிழா

கிளிநொச்சி,மே12

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இரணைமடு கனகாம்பிகை அம்மன பெருங்கோயில் இரண்டாம் நாள் பெருந்திருவிழாவின் போது சிலப்பதிகாரப் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

ஆலய அறங்காவலர் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழா கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

காலைமுதல் நடைபெற்ற நிகழ்வில் 'கண்ணகியின் வாழ்வியல், கண்ணகி காட்டிய வீரம்' என்னும பொருளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் முனைவர் சி.திருநாவுக்கரசு சிறப்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பெண்ணின் பெருமையை பெரிதும் பேசுவது? சிலப்பதிகாரமா? இராமாயணமா? என்னும் தலைப்பில் தமிழ்வேள் பொன் கணேசமூர்த்தி தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது.

இறுதி நிகழ்வாக புதுக்குடியிருப்பு செ.இரவீந்திரன் வழங்கிய 'சிலம்புச் செல்வி கண்ணகி' என்னும் நாட்டுக் கூத்து இடம்பெற்றது.(8-204)

ஆடிப்பிறப்பை முன்னிட்டு
அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகம் நடத்தும்
மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி-2005

- கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்குபற்றும் 12பந்துப் பரிமாறத்தைக் கொண்டதாக அமையும்.
- பதிவுக்கட்டணம் ரூபா 150/= (முற்பதிவுக் கட்டணம் உட்பட)
- விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும்போது முற்பணமாக ரூபா 50/= செலுத்தவேண்டும்.
- பதிவுகளின் இறுதித்திகதி: 20.05.2005
- மேலதிக விவரங்கள் விண்ணப்பப்படிவத்தில்

விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடங்கள்:

இந்திரன் ஹாட்வெயா - கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
திலகா ஸ்ரோர்ஸ - அராலி தெற்கு, (சரஸ்வதி மகா வித்தியாலயம் அருகில்)
மயூராஸ் ஸ்ரூடியோ - சங்கானை (குளத்தடி)

களவத்துறை விளையாட்டுக் கழகம், - தலைவர்
அராலி தெற்கு. (45262)(21-14-16)



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 677 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 10-5-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4467719-4482991 |

லக்கினம் மகரம்

வெற்றி இலக்கங்கள்
26 36 38 53

ஜக்பொட் பரிசு ரூபா.34,42,300/- வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 34,42,300/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தம் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,34,840 | 10/- | 33,48,400/- |
| 2.இலக்கங்கள் | 30,766 | 20/- | 6,15,320/- |
| 1.இல லக்கினம் | 30,184 | 30/- | 9,05,520/- |
| 2.இல லக்கினம் | 2,826 | 100/- | 2,82,600/- |
| 3.இலக்கங்கள் | 819 | 500/- | 4,09,500/- |
| 3.இல லக்கினம் | 78 | 5,000/- | 3,90,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 24,42,300/- | - |
| மொத்தம் | 3,99,522 | - | 74,03,590/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 74,03,590/-

4477017-9-35
4478738-2-98
4478017-2-86
4475875-0-88
4480466-7-74



கிறிஸ்தல சேவ ஆச்சிரமம்
மருதனார்மடம், சுன்னாகம்
பரிசுத்த ஆவியரின் திருவிழா

பரிசுத்த ஆவியரின் பெருவிழாவை முன்னிட்டு
மே 13ஆம், 14ஆம் திகதிகளில்
பெந்தோகொஸ்தே விழா நடைபெறும்.

**13-05- 2005 வெள்ளி**

| | | |
|---|---|---|
| மாலை | 5 மணி | நற்செய்திக் கூட்டம் |

**14-05- 2005 சனி**

| | | |
|---|---|---|
| காலை | 7.30 மணி | திருவிருந்து வழிபாடு |
| காலை | 9.00 மணி | காலை உணவு |
| காலை | 9.30 மணி | விவிலிய ஆய்வு |
| காலை | 11.00 மணி | தேநீர் இடைவேளை |
| காலை | 11.30 மணி | அமைதித் தியானம் |
| மதியம் | 12.00 மணி | மன்றாட்டு |
| பிற்பகல் | 12.30 மணி | மதிய உணவு |
| பிற்பகல் | 2.00 மணி | அமைதி நேரம் |
| பிற்பகல் | 2.30 மணி | பரிசுத்த ஆவியரும் சமூக நீதிக்கான தாகமும் |
| பிற்பகல் | 3.30 மணி | தேநீர் இடைவேளை |
| மாலை | 4.00 மணி | நற்செய்திக் கூட்டம் |
| மாலை | 5.30 மணி | நிறைவு |

(45249)(24-14) - பரிபாலன சபை.


## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டப் படிப்புகள் பிரிவின் நுண்கலைமாணி (இசை மாணி/நாட்டியமணி) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை நுண்கலைமாணி 2000 ஆம் ஆண்டில் பட்டம்பெறுவோர் விவரமும் வெளியாகியுள்ளது.

மேலதிக விவரங்களை மாணவர்கள் வெளிவாரிப் பட்டப்படிப்பு அலுவலகத்தின் அறிவித்தல் பலகையில் பார்வையிட முடியும்.

(8-13)


THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
By: விக்னேஸ்வரன் ஆச்சாரி 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (45044)(21-14-16)



வான் விற்பனைக்கு
WP JO XXXX தொடர் இலக்கமுடைய (ISUZU) இசுசு புதிய எல்ப் 250 ரக வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6354362 (45251)



மாபெரும் கருத்தரங்கு
D.M.I.யில
பொருளியல் K.உதயன்
A/L-2005
பகுதிI 'அ' 'ஆ' பகுதிகள்.
பகுதிII 'அ' 'ஆ' பகுதிகள்.
சனி,ஞாயிறு-14,15ஆம் திகதிகளில
(மாலை 2மணி)
குறிப்பு வெள்ளி 20 ஆம் திகதி
(காலை 8.30-5.30)
அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.
18ஆம் திகதிக் கருத்தரங்கு 26ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதைக் கவனிக்க.
(45257)(29-14-17)



அஸ்ரன் பதிப்பகம்
வினாவிடை
பயிற்சி நூல்
G.C.E. O/L
12 Years
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
உடன் தொடர்புகொள்ளவும்
சிறீ கஜந்தன் ஸ்ரோர்ஸ்
802/5, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 077 6163125
(45227)(22-14-16)


### மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம்


வண்ணார்பண்ணை வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

ஜே- 99 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பெண்களையும் இக்கூட்டத்தில கலந்து கொள்ளுமாறு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (ஐ-204)

### கருத்தரங்கு

உரும்பிராய் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு உரும்பிராய் புனித மைக்கல ஆலய வளாகத்தில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. மன்ற இணைப்பாளர் இ.விஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 'நல்ல சினிமாவுக்கான தேவை' என்னும் தலைப்பில் சலன சித்திர அமைப்பின் யாழ். மாவட்ட பொதுச் செயலாளர் எம் சாந்தன் சத்தியகீர்த்தி கருத்துரை வழங்கவுள்ளார். (ஐ-204)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 18 - 11 - 1936 | | 05 - 05 - 2003 |

'சிவத்தமிழ்மணி ஆறுமா'
**அமரர் மாப்பாணர் துரைராசா**
(ஓய்வுபெற்ற இலிகிதர், நகரசபை - சாவகச்சேரி)

திதி: சதுர்த்தி 12.05.2005

ஆண்டுகள் இரண்டு அகன்றே சென்றாலும்
அகலாது எம் மனதை வீட்டு உம் நினைவுகள்!
நீங்கள் விட்டுச் சென்ற நற்கருத்துக்கள்
என்றும் எம்மை நல்வழிப்படுத்தும்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கோனேஸ் கொமினிக்கேசன் & ரவல்ஸ்
மீசாலை மேற்கு, மீசாலை.
(வயாவிளான்). (45254)(21-14-17-29)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிட்டிணபிள்ளை பொன்னம்மா (பொம்மை)



கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிட்டிணபிள்ளை பொன்னம்மா நேற்றுமுன்தினம் (10.05.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னட்டி கிட்டிணபிள்ளையின் அன்பு மனைவியும் யோகராசா, செல்வமலர், புவனேஸவரி, விக்கினேஸ்வரி, கனகராசா, தவராசா (டோகா -கட்டார்), யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசதுரை, மகாலிங்கம், புஸ்பராணி, இராஜராஷேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் சுலேசன், சுகிர்தன், புவனன், கோகிலதாஸ், உமாரமணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டான் பூவரம்பிட்டி மயானத்துககு முற்பகல் 11 மணியளவல் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நொத்தாரிஸ் தோட்டம், கரணவாய் மேற்கு, கரவெட்டி.*
கி.யோகராசா (ராசன் -மகன்). (45260)(14-17-29)

## அம்பலவாணர் குமாரவேலு (ஓய்வுபெற்ற அதிபர்)



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தி, இல. 132/1, கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் குமாரவேலு 10.05.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர்-கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் ஆசிரியர் (மலேசியா), வித்துவான் பொன்.கனகசபை (ஆசிரியர்) மற்றும் நாகம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஞானம்மா (ஆசிரியை) மற்றும் இலட்சிமிப்பிள்ளையின் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் ஞானகுமார் (வர்த்தக வங்கி, வெள்ளவத்தை), தேவகுமார் (ஜேர்மனி), ஆனந்தகுமார், ஞானரதி (பிரான்ஸ்), மைதிலி (பிரான்ஸ்), பவானி, தனஜா (கனடா), காலஞ்சென்ற செந்தில்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வதேவி, புஸ்பராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற த்யாபரி (பானுகாமன்ஸ், பிறவுண்றோட்), ஜெயச்செல்வன் (பிரான்ஸ்), குகதாசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் (விஜி), இரவீந்திரநாதன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் பிரவீனா, டிலக்ஸ்சன், பிரியந்தி, பிரசாயினி, செந்தூரன், கௌதமன், அலெக்ஸ், பானு, மேசி, ஜனாத்தனன், அர்ச்சனா, காண்டீபன், அனீத்தா, சிந்துஜன், அனுசன், அகிலா, கோபிநாத், பிரியங்கா, லோயேல, றேச்சல், மர்லின், ஜோஸ்லின் ஆகியோரின் அன்புப் பேரனும் முருகேசு, திலகவதி, வேணுகோபால், பராசக்தி கனகசபை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பராசு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.05.2005) வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லூர் சென்.ஜேம்ஸ் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*132/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.*
மனைவி, பிள்ளைகள். (45258)(21-14-17-29)

## திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் வேதர் அடைப்பு காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா நேற்று (11.05.2005) புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேதர் அடைப்பு ஆலங்கன்று வயிரவர் கோயில் மணியகாரர சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் யோகேஸ்வரியின் அன்புத் தாயாரும் கொச்சிக்கடை சிவலிங்கத்தின் அன்பு மாமியாரும் மயூரன், அருந்ததி, சிவரூபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தங்கரியம், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
*வேதர்அடைப்பு, காரைநகர்.* (45256)(32-14-17-29)
ஆ.தி.சுப்பிரமணியம் (கணவர்), மகள் - மருமகன்.

இளவாலை மயிலங்கூடல் அருள்மிகு ஞான வைரவர் ஆலய
மகாகும்பாபிஷேக மண்டல பூர்த்தி தின (1008) நாவோஸ்தர

## சகஸ்ர சங்காபிஷேக விஞ்ஞாபனம்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 13.05.2005 காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் வருகை தந்து வைரவப் பெருமானின் அருளைப் பெறும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம். மாலை 6 மணிக்கு பூந்தண்டிகையில் சுவாமி எழுந்தருளுவார். பகல் அன்னதானம் இடம்பெறும்.

குறிப்பு - வருடாந்த பொங்கல் விழா 24.05.2005 செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

(45273)(38-16-18-12) ஆலய பரிபாலன சபை.


# மீள் கேள்வி அறிவித்தல்

**சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்**

**சேதமடைந்த சாவகச்சேரி வைத்தியசாலை கட்டடங்களை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கான கேள்விகள்**

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வளவுக்குள் சேதமடைந்த நிலையில் உள்ள கட்டடங்களை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கு ஒவ்வொரு விடயங்களுக்கும் தனித்தனியாகத் தேறிய பெறுமதியில் கேள்வி கோரப்படுகின்றது. உரிய கேள்விப் படிவங்களை ரூபா 250 கேள்விப் பத்திரப் பணமாகவும் (மீளளிக்கமுடியாது) அட்டவணையில் காட்டிய தொகைகளை கேள்விப் பிணையாகவும் செலுத்தி 25.05.2005 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிவரை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை 27.05.2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன் உரிய கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் உடன் திறந்து ஆராயப்படும். சித்திபெறும் கேள்விக்காரர் உடன் கேள்வித் தொகையைச் செலுத்துவதுடன் கேள்வி நிபந்தனையில் குறிப்பிட்ட காலத்துக்குள் கட்டடப்பொருள்கள் முழுமையாக எடுத்துச்செல்லப்பட்டு இடிபாடுகளும் அகற்றப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விகாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்டபிரதிநிதி கலந்துகொள்ளல் முடியும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ள முடியும்.

| கேள்வி விடயஅட்டவணை | பிணைப்பணம் |
|---|---|
| 1) மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரியில் உள்ள புதிய நிர்வாக தொகுதிக் கட்டடத்திலுள்ள பீம் (Beam) கம்பிகளை மட்டும் கழற்றி எடுத்துச்செல்லுதல். | 50, 000.00 |
| 2) சேதமடைந்த பழைய நிர்வாகக் கட்டடத் தொகுதியை நில மட்டம் வரை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச்செல்லுதல். | 25, 000.00 |

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
11.05.2005 (C-42781)(38-12-16-18)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மாணவர் மன்றம் 'கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' ஆதரவுடன் நடத்தும் உயர்தர பாடசாலை மாணவர்களுக்கிடையிலான

## மாபெரும் வினாடிவினாப் போட்டி

★ முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் பல்வேறு செயற்பாடுகளில் ஒன்றாக, யாழ்.மாவட்ட மாணவர்களின் பொது அறிவுத்திறனை வளர்க்கும் நோக்குடன் உயர்தரப் பாடசாலை மாணவர்களிடையேயான வினாடிவினாப் போட்டி நிகழ்வு இடம்பெறுகின்றது.

★ போட்டிகள் யாவும் வலயங்களூடாக இடம்பெற்று இறுதிப் போட்டி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றது.

★ போட்டித் தொடரின் முதல் போட்டியாக வலயம் I யாழ். கல்வி வலயத்தின் போட்டிகள் யாவும் நாளை ஆரம்பமாகின்றன.

*போட்டி நடைபெறும் இடம்:* யாழ்.மத்திய கல்லூரி
*காலம்:* நாளை (13.05.2005) வெள்ளிக்கிழமை காலை 9 மணி

(45261)(38-12-16-18) முகாமைத்துவ மாணவர் ஒன்றியம்.


யாழ்ப்பாணப் பிரதேச செயலக நலன்புரிச்சங்கம்

## துயர்பகிர்கின்றோம்

யாழ்.பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (நெடுங்குளம் ஜே/61) திரு.நடராசா நவலோகன் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி நவலோகன் அனுசியா**

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்.
பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.
(C-42788)(38-12-16-18)

# யாழ்ப்பாணத்தில் வீடு வீடாக 'டெங்கு' நோய் பற்றி ஆய்வு!

**பரிசோதனையின் பின் உத்தரவாதச் சான்றிதழ்**

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.மாவட்டத்தில் வீடு வீடாக டெங்கு நோய்ப்பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, டெங்கு தடுப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. அதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வீடுகள் தோறும் சுகாதார வைத்திய அதிகாரிகளால் டெங்கு நோய் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

வவுனியா மற்றும் கொழும்பு மாவட்டங்களில ஏற்கனவே, நடைமுறையில் உள்ள டெங்கு நோய்த் தடுப்புச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை இங்கும் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இத் திட்டம் முதன்முறையாக யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-185-202)


IIS CITY CAMPUS

MBA

விரிவுரைகள் ஆரம்பம்

Sikkim Manipal பல்கலைக்கழகத்தின் கல்வியாண்டு 2005/2006 இற்கான விரிவுரைகள் 14.05.2005 ஆரம்பமாகவுள்ளன. மேற்படி கற்கை நெறிக்குப் பதிவினை மேற்கொண்ட மாணவர்கள் 12ம் திகதிக்கு முன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் புதிய மாணவர்களும் 12.05.2005 வரை பதிவினை மேற்கொள்ளமுடியும்

Director
IIS City Campus,
# 181, Navalar Road, Jaffna.
☎021 222 8060



**அலுவலக உத்தியோகத்தர் தேவை**

எமது நிறுவனத்தில் மேற்படி பதவிக்குச் சேர விரும்புபவர்கள் சான்றிதழ்களுடன் இன்று பிற்பகல் 5.45 இற்கு நேரில் வரவும்.

தயா ஏஜென்சி (Thaya Agency)
இல.3, நவீன சந்தை, மேல்மாடி,
யாழ்ப்பாணம். (45259)(38-12-16-18)



ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும் மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி, மணிவண்ணன், சுந்தர்ராஜன் நடித்த

பிரியமானதோழி (ரீகல்)

நாளை முதல் தனுஷ், ஸ்ரீதேவி, நடித்த

தேவதையைக் கண்டேன் (பு.நே.)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30,



நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

ஜெய் ஆகாஷ், மிஷா, ராக்கிரண், செந்தில், ராதாரவி நடித்த



செவ்வேல் (சினிமா)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)



மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.

சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த

காட்சி நேரம்: 10.30a.m., 2.30 p.m., 6.30p.m., 9.30 p.m.

(C/42804)



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

50 ஆவது நாளை நோக்கி ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



சந்திரமுகி (சினிமா)

காட்சிகள்: 11.00. 3.00. 7.00 10.00. (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயா சந்திரசேகரம்



கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி ஜெயா சந்திரசேகரம் அவர்கள் நேற்று (11.05.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சந்திரசேகரம் (முன்னாள் இ.போ.ச. நடத்துநர்) அவர்களின் பாசமிகு மனைவியும் உருத்திரசேகரம் (ஜனசக்தி இன்சூரன்ஸ் உத்தியோகத்தர்), கிருஷ்ணாலினி (யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப் பீட மாணவி), விஜயருக்ஷாயினி (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மில்பர் ராஜனின் அன்புச சகோதரியும் சந்திரேஸ்வரி, விஜயகாந்தன், சாயாதேவி, கிருஸ்ணவேணி, பெல்சியா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2005) வியாழக் கிழமை மாலை 4.30 மணிக்கு 54/1, விபுலானந்தர் வீதி, புங்கன்குளம் ஸ்ரேசனடியில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துபாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கொழும்புத்துறை.* (45270)(38-16-18-12) சந்திரசேகரம் (கணவன்).

## திருமதி செல்வராசா சரஸ்வதி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா சரஸ்வதி அவர்கள் நேற்று (11.05.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா (சின்னன்னை) அவர்களின் அன்பு மனைவியும் செல்வகுமாரி (லண்டன்), ஜெயகுமாரி, விஜயகுமாரி (லண்டன்), சிவகுமார் (ஜேர்மனி), உதயகுமாரி, இரத்தினகுமார் (பிரான்ஸ்), லவகுமாரி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேந்திரநாதன் (லண்டன்), சிவலிங்கம், ஜெயக்குமார் (லண்டன்), கோபாலகிருஷ்ணன், வத்சலா (பிரான்ஸ்), கேசவன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் வான்மதி, ஐங்கரன், அஜந்தன் (லண்டன்), சிவாஜினி, சிந்துஜா, அரவிந்தன், சங்கீதா (லண்டன்), தக்ஷாயினி, பிரவீன், சகானா, அடானா (பிரான்ஸ்), தூயோன், சேயோன் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தாவில் ஒழுங்கை,* தகவல்:
*கொக்குவில்.* (45267)(38-16-18-12) குடும்பத்தினர்.

## வீரகத்தியார் சுப்பிரமணியம்

**(மயிலுவாத்தியார் - இளைப்பாறிய ஆசிரியர்)**

புற்றளை, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தியார் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (11.05.2005) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி, சாரதாதேவி, சகுந்தலாதேவி, சாந்தகுமாரி (ஜேர்மனி), சத்தியபாமா, சுகந்தா (ஜேர்மனி), சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கணேசராசா, தியாகராஜா, கிருண்ணமூர்த்தி, கிருஸ்ணராசா (ஜேர்மனி), இரத்தினகுமார், ரவீந்திரன் (ஜேர்மனி), பகீரதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மாதவன், ஜெகதா, சதீஸ், அகிலா, பாலபவன், சுகந்தன், சுதா, கோகுலன், செந்தூரன், துவாரகா, சோபனா, மேனஜன், நீருகா, நிவேகா, ஆரணா, அனித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆர்த்திகனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.05.2005) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*புற்றளை, புலோலி தெற்கு,* குடும்பத்தினர்
*புலோலி.* (C-42789)(38-16-18-12) க.பவன் (பேரன்).

## சபாரட்ணம் கந்தசாமி

**(முன்னாள் ஸ்ரீலங்கா புத்தகசாலை காகிதாதி விநியோகத்தர்)**



கொக்குவில், தலையாளியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் கந்தசாமி நேற்று (11.05.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் - அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் முருகுப்பிள்ளை காலஞ்சென்ற மகேஸ்வரி, தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரரும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் ரஞ்சினி, ரோகினி, கெங்காதேவி (சுவிஸ்), ஸ்ரீரஞ்சன், வசந்தினி, சாந்தி, மகாதேவா (தேவா), சிவகணேசா (சிவா - U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் லோகேந்திரன், தர்மலிங்கம், இரட்ணமூர்த்தி (சுவிஸ்), ரஞ்சினிதேவி, பிரதீபன், மாலதி ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2005) வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத நிலைய வீதி,* தகவல்:
*கோண்டாவில் மேற்கு,* ச.ஸ்ரீரஞ்சன், க.மகாதேவா
*கோண்டாவில்.* (45271)(38-16-18-12) (மகன்மார்).

## திருமதி சிவசுப்பிரமணியம் பூமணி

இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் பூமணி அவர்கள் நேற்று (11.05.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சிவசுப்பிரமணியம் (றோயல சிலோன்நேவி) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி மணிவதனம் திருஞானசம்பந்தன் (இணுவில் இந்துக் கல்லூரி, சங்கீத ஆசிரியர்), சுகிர்தமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருஞானசம்பந்தன (சம்பந்தர் ஹாட்வெயர்), லோகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவரஞ்சன், தர்சினி, ஸ்ரீவிசாகன, மதுமதி, காலஞ்சென்ற கவிதரன் (ஜேர்மனி), அனித்தா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரவிகிருஷ்ணன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2005) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தத் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (45272)(38-16-18-12) தகவல்:
*மஞ்சத்தடி, இணுவில்.* திருஞானசம்பந்தன் (மருமகன்).

# 2 ஆவது நாளாக நேற்றும் மன்னாரில் ஹர்த்தால்!

மட்டக்களப்பு சந்திவெளியில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் இராணுவத்தினர் புரிந்த அட்டகாசத்தை எதிர்த்து நேற்று இரண்டாவது நாளாக மன்னார் மாவட் டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக மாவட்டத்தின் அனைத்து பகுதிகளும் ஸ்தம்பிதம் அடைந் தன.

இதேவேளை, நீண்ட குறுந்தூர போக்கு வரத்துச் சேவைகளும் தடைப்பட்டன. மாவட் டத்திலுள்ள அரச, தனியார் நிறுவனங்கள் மூடப் பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு மாணவர் கள் சமுகம் கொடுக்காததால் பாடசாலைகள் மூடப்பட்டுக் காணப்பட்டன.

ஹர்த்தாலின்போது காலை வேளையில் எதுவித அசம்பாவிதங்களும் இடம்பெற வில்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் நண்பகல் 12.30 மணிக்குப் பிறகு இப்பகுதி யில் உள்ள மாணவர்கள், பொது அமைப்பு களின் பிரதிநிதிகள் மன்னார் பிரதான வீதி களில் ரயர்களை எரித்தும், வீதித்தடைகளை ஏற்படுத்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைக் கேள்வியுற்று ஸ்தலத்திற்கு விரைந்த பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து வீதித்தடைகளையும் எரிந்து கொண்டிருந்த ரயர்களையும் அகற்றினர்.

வீதியின் அருகில் உள்ள தமிழ் மாணவர் ஒன்றியத்தின் காரியாலயம் மற்றும் சிறிய படமாளிகை ஒன்றினையும் படையினர் அடித் துச் சேதப்படுத்தினர்.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அலுவல கத்தில் இருந்த விடுதலைப் புலி உறுப்பின ரான தமிழ்ப்பரிதி என்பவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். மாலையில் அவர் விடு விக்கப்பட்டார்.

முன்னதாக கைது செய்யப்பட்ட உறுப் பினரை விடுதலை செய்யக்கோரி மக்களும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் மன் னார் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர் விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினரிடம் மகஜர் ஒன்றினை யும் கையளித்தனர்.

(த)

# இம்மாத இறுதியில் காஸ் விலை அதிகரிக்கும்?

கொழும்பு,மே12

சமையல் எரிவாயுவின் விலை இம்மாத இறுதியில் அதிகரிக்கப்படக்கூடுமென்று தெரிய வருகிறது.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் இதர காரணங்களால் சமையல் எரிவாயுவின் விலை உயர்த்தப்படவேண்டுமென்று பாவனை யாளர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் எரிவாயு நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை - சமையல் எரிவாயுவின் விலையை 114 ரூபாவால் அதிகரிக்க அனுமதி யளிக்குமாறு ஷெல் காஸ் நிறுவனமும், லாவ்ஸ் நிறுவனமும் பாவனையாளர் பாதுகாப்பு அதி காரசபையைக் கோரியிருக்கின்றன.

இது தொடர்பான தீர்மானமொன்றை எதிர் வரும் புதன்கிழமை பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை மேற்கொள்ளுமென அதன் தலைவர் எம்.மூஷின் நேற்றுத் தெரிவித் தார்.

## செவனகலவில் ஆயுதங்கள் மீட்பு

செவனகல சீனித் தொழிச்சாலைக்குச் சொந்தமான வீடொன்றில் மறைத்து வைக் கப்பட்டிருந்த இராணுவத்தினருக்குச் சொந்த மான கைக்குண்டு ஒன்றும் - துப்பாக்கி ஒன்றும் ரி56 துப்பாக்கிக்குப் பாவிக்கப்படும் தோட்டாக்களும் செவனகல பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபரொருவரை யும் பொலீஸார் கைதுசெய்தனர்.

இந்த ஆயுதங்களை இங்கு யார் கொண்டு வந்தார்கள் என்பது பற்றி விசாரணை நடை பெறுகிறது. கடந்த செவ்வாய் இரவு இவை கைப்பற்றப்பட்டன. (க)

## நேற்றைய ஆட்டத்தில் பல்கலை. அணி வெற்றி

வலி.வடக்கு.மே 12

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக 'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னா கம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட் டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி யீட்டியது.

அந்த அணி வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியை 3:1 என்ற கோல்க்கணக்கில் வென்றது. இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

(த 86)

## சந்திவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினமும் பகல் வேளையில் பத்துக்கும் மேற் பட்ட இராணுவத்தினர் இந்தச் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டு வந்தனர். இரா ணுவம் கடமையில் இல்லாத இரவுவேளை யில் இனந்தெரியாத நபர்களினால் இந்தச் சோத னைச் சாவடிக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

சந்திவெளி பிரதான வீதியில் வைத்திய சாலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ - பொலீஸ் கூட்டு சோதனைச் சாவடியை அகற்றுமாறுகோரி கடந்த திங்கட் கிழமை பொது மக்கள் மேற்கொண்ட மறியல் போராட்டத்தை யடுத்து. அந்தச் சோதனைச் சாவடி சம்பவதினம் அன்றே இராணு வத்தினரால் அகற் றப்பட்டிருந்தது. இந்த மக்கள் போராட் டத்தில் இராணுவம் சுட்டு ஒருவர் உயிரி ழந்தார்; 15 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதனையடுத்து, சந்திவெளியில் எஞ் சியிருந்த மற்று மொரு சோதனைச் சாவடியும் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளது. தற்போது சந்திவெளி யில் எந்தவொரு சோதனைச் சாவடி யும் இல்லை என்பது குறிப்பிடத்தக் கது.

(ஜ-க)

## அரச புலனாய்வாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

அதிகாலை 4.30 மணியளவில் சிங்கப்பூர் விமானத்தில் சென்ற இவர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக ஐரோப்பிய நாடொன்றிற்கு அழைத் துச்செல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளால் இவர்களது உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலின் காரணமா கவே இவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பிவைக் கப்பட்டனர் என பாதுகாப்புத்துறையின் உயர் மட்ட வட்டாரங்கள் கூறின.

(த-க)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதே அரசமைப்புத் திருத்தம் தொடர் பான தமது யோசனைகளையும், அதற்கான திட்டங்களையும் ஜனாதிபதி அவருக்கு விளக்கி னார் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி யினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் -

இவ் விடயத்தில் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களது ஆலோசனைகள் தமக்கும் தேவையென்றும் -

ஜனாதிபதி அந்தச் சந்திப்பின்போது குறிப் பிட்டார் எனத் தெரிகிறது.

அரசியலில் மேலும் பல பணிகளைத் தாம் ஆற்ற வேண்டியுள்ளார் என்றும் அதனால், இப் போதைக்கு அரசியலில் இருந்து ஓய்வுபெறும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் கூறினார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட் டத்தின் படி ஜனாதிபதி குமாரதுங்க தமது தற் போதைய பதவிக்காலம் முடிந்ததும் அப்பதவி யிலிருந்து வெளி யேற வேண்டும்.

எனவே, தம் மைத் தொடர்ந்தும் அரசியல் அதிகாரத்தில் வைத் திருக்க வழிசெய்யும் விதத்தில் அரச மைப்பை மாற்ற ஜனாதிபதி விரும்பு கிறார்.

இத்தகைய எண் ணம் ஜனாதிபதிக்கு அண் மைக்காலமாக இருந்து வந்தபோதும் அம்முயற் சியை ஆரம்பிக்காமல் அவர் ஒத்திப்போட்டு வந்தார். மீண்டும் இப்போது அம்முயற் சியை ஆரம்பிக்க அவர் முடிவு செய்தி ருக்கின்றார் என் கின்றன விடய மறிந்த வட்டாரங் கள். (ஜ-க)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு உட்பட புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புனர்நிர்மாணப் பணிகளைச் செய்வதானால் புலிகளுடன் ஓர் உடன்படிக் கையை ஏற்படுத்திக் கொண்டு அதன் அடிப் படையில் செயற்பட வேண்டும் என்று ஆழிப் பேரலை ஏற்பட்ட உடனேயே எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் ஐ.தே.க. நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டதாக முன்னர் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால், இன்று ஜனா திபதி என்ன சொல்கிறார்? சர்வதேசத்தின் நெருக் கடிக்கு மாறாக அவரால் எதுவும் செய்யமுடிய வில்லை.

மறுபுறம் இந்தியாவுக்கு ஆபத்து வரப்போ கிறது என்று நீலிக்கண்ணீர்வடிக்கும் ஜே.வி. பியினர் அன்று என்ன செய்தனர். இந்திய இரா ணுவத்தை குரங்குப்படை என்றனர். இந் தியப் பொருள்களை இலங்கையில் விற்கக் கூடாது என்று தடை விதித்தனர். இந்தியாவில் இருந்து மருந்து வகைகளைகூட இறக்குமதி செய்யக்கூ டாது என்றனர்.

எமது தலைவர் விடுதலைப் புலிகளுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டவுடன் நாடு பிளவுபட்டுவிட்டது என்றார்கள். ஆனால், நன்மைகளும் உள்ளன என்று இப்போது ஒப் புக்கொள்கின்றனர்.

ஜனாதிபதி 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூட அந்த உடன்படிக்கையில் எழு பது வீதமான நன்மைகள் ஏற்பட்டன என்று கூறியிருக்கிறார்.

அரசு ஏற்படுத்தப்போகும் பொதுக்கட்டமைப் புப் பற்றி எமக்கு எதுவும் தெரியாது. வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் உதவிகள் செய்யப்படல் வேண்டும். எவ்வித பாகுபாடும் இன்றி மூவின மக்களுக்கும் உரிய நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும் என்பதே ஐ.தே.கவின் கோரிக்கையாகும்.

பொதுக்கட்டமைப்புக் குறித்து எமக்கு உத்தி யோகபூர்வமாக அறிவித்தால் நாம் அது பற்றிய எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம். - என்றார் அவர்.


**PHYSICS**
(Personal Class)
Mr.M.ஸ்பெல்மன்
(ஒருவகுப்பில் 20 மாணவர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்)

| A/L 2007 | A/L 2006 |
| --- | --- |
| பொறியியல் | ஓட்டமின்னியல் |
| ஆரம்பம்:13.05.2005 | ஆரம்பம்:13.05.2005 |
| வெள்ளி 5.30-6.30 P.M. | வெள்ளி 6.30-7.30 P.M. |

(45192) (12-16)
இல.18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**NEW SCIENCE COLLEGE**
பௌதிகவியல்
2006 மின்னியல்
சனி, ஞாயிறு 7 - 8
(45245) (12-16) By: R. குகன்

மாகாண மட்ட ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள்
நுண்ணறிவு - கிரகித்தல்

| | |
| --- | --- |
| நியூட்டன் (D.C.S) ஆரியகுளம் சந்தி அருகில் | சனி, ஞாயிறு 9.00 - 12.00 மணி |
| திகழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி, இணுவில். | வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு 3.00 - 6.00 மணி |

அச்சடித்த பாடக் குறிப்புகள், கையேடுகள் இலவசம்.

**விசேட கருத்தரங்கு!**
அண்மையில் நடைபெறவுள்ள பட்டதாரி ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான எதிர்பார்க்கப்படும் வினாக்களுடன் கூடிய விசேட கருத்தரங்கும், வினாவிடையும். போட்டிப்பரீட்சையின் முதல் வழிகாட்டி! திரு.P.உமாசங்கர்.
காலம்-14-05-2005 - 15-05-2005
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(45244) (12-16)

**NEW SCIENCE HALL**
2005 பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு
மாதிரிப் பரீட்சை பௌதிகவியல்
16.05.2005 (திங்கள்)
8.30 - 10.30
(45246) (12-16) By: R. குகன்

**கீல்வாத மூட்டு வீக்கம்**
கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்தமுடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.
மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:
FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Approved & ISo 9001:2000 Qms Certifed Company
(சி41632)(29-14)

கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
14.05.2005 / 16.05.2005 } பகல் 10 மணி
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி 42735)(12-45)

**தொழிற்பயிற்சி நெறிகள்**
வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ,ரீ.வீ,டெக் மற்றும் எலெக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை (காலம் 10 மாதங்கள்)
* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன (காலம் 07 மாதங்கள்)
* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை (காலம் 07 மாதங்கள்)
* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை (காலம் 06 மாதங்கள்)
* AUTO WIRING (காலம் 03 மாதங்கள்)
ஆரம்பம்:-14,05.2005 ,16.05.2005 (C-42444)
மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## நடராசா கணேசராஜா



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கணேசராஜா அவர்கள் நேற்று (11.05.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் செந்தினி, (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை), பிரியதர்சினி (ஆசிரியை), பாரதி (யாழ். பல்கலைக்கழகம்), விஜயதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மணிவண்ணனின் (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் விளாவெளி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சண்டிலிப்பாய் மத்தி.* (45274) (16 - 18) மணிவண்ணன் (மருமகன்).

## Dr. திருமதி வாசுகி தயாளன் (D.A.M.)

கைதடியைப் பிறப்பிடமாகக்கொண்ட Dr. திருமதி வாசுகி தயாளன் அவர்கள் நேற்று (11.05.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தயாளன் (கணக்காய்வாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் யாதவன் (பரியோவான் கல்லூரி), கஸ்தூரி (சுண்டிக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

*துவாரகை* தகவல்:
*கைதடி மேற்கு, கைதடி..* (45275) (16 - 18) வே.தயாளன் (கணவர்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.